தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●

முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்

விலை ரூ. 15/– மலர் 20 - இதழ் 02 – ஜூன் 2018 | Price : Rs. 15/- Vol : 20 - Issue : 02 - June 2018

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை | RURAL DEVELOPMENT & PANCHAYAT RAJ DEPARTMENT

மகளிர் சுய உதவிக் குழுக்கள் முன்னேற்றம் அடைந்திட பல்வேறு அறிவிப்புகள்

திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப.,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்.

அன்புள்ள சுய உதவிக் குழு சகோதரிகளே,

மாதந்தோறும் உங்களுடன் முற்றம் இதழ் வாயிலாக என்னுடைய கருத்துக்களை பகிர்ந்து கொள்வது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது. மகளிர் சுய உதவிக் குழு என்றாலே தன்னம்பிக்கை, விடாமுயற்சி, ஒற்றுமை என இந்த மூன்றையும் ஒரு சேர நினைவூட்டும் வகையில் உங்களின் செயல்பாடு சிறப்பாக உள்ளது. உங்களின் இந்த தொடர் வெற்றிக்கு தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் என்றும் உறுதுணையாக இருக்கும்.

மகளிரின் மேம்பாட்டிற்காக பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தி வரும் நம் தமிழக அரசு, சட்டமன்றக் கூட்டத் தொடரில் மகளிரின் மேம்பாட்டிற்காக மேலும் பல பயனளிக்கும் திட்டங்களை அரசுத் துறைகளுக்கான மானியக் கோரிக்கையின் போது நமது துறை அமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

அதன்படி ஊரகப் பகுதிகளில் கிராமச் சந்தைகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் பணியாற்றும் கணக்காளர்களுக்கு மதிப் பூதியம் வழங்குதல், 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்க 104 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 13,500 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்க 20.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு, 385 வட்டார அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்துதல், வட்டார அளவிலான பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி பயிற்சிகள் வழங்குதல், இ–மதி (e-Mathi) வலைத்தளத்தை மேம்படுத்துதல், 71,000 இளைஞர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்குதல், தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு ஆதார நிதி வழங்க 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு, 10,000 நகர்ப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ஆதார நிதி வழங்க 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு மற்றும் மகாத்மா காந்தி தேசிய வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து 25,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு பல்வேறு பயிற்சிகள் வழங்கவும், சுய தொழில் மேற்கொள்ளவும் 167.76 கோடி ரூபாய் ஒதுக்கீடு என பல்வேறு அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

மேற்கண்ட அறிவிப்புகள் அனைத்தும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் வளர்ச்சிக்கு மேலும் வலுவூட்டுவதாக அமையும்.

தற்போது கோடைக்காலம் முடிந்து மழைக்காலம் துவங்கியுள்ளது. கோடைக்காலத்தில் தண்ணீர் பற்றாக்குறையால் நாம் சிரமப்பட்ட நிலையை மனதில் கொண்டு, தற்போது நமக்குக் கிடைக்கும் நீரை சேமிக்கவும், சிக்கனமாகப் பயன்படுத்தவும் வேண்டும். கழிவு நீர் வாய்க்கால்களை பராமரித்தல், கழிவுகளை மழை நீர் வாய்க்கால்கள், ஏரிகள், குளங்கள், குட்டைகள் போன்றவற்றில் கொட்டுவதையும், பிளாஸ்டிக் பொருட்களைப் பயன்படுத்துவதையும் முற்றிலுமாகத் தவிர்த்தல், வீடுகளில் மழை நீர் சேமிப்பு நிலைகளை அமைத்தல், சுற்றுப்புறங்களில் மரம் மற்றும் செடிகளை நடுதல், மேலும் சுற்றுப்புறங்களைத் தூய்மையாக வைத்துக் கொள்ளுதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டும்.

மேற்கண்ட நடவடிக்கைகளில் நீங்கள் ஈடுபடுவதுடன், மற்றவர்களை குறிப்பாக இளைய சமுதாயத்தினரையும் பின்பற்றச் செய்திட வேண்டும். அனைவரும் ஒன்றாக இணைந்து செயல்பட்டு வலுவான வளமான தமிழகத்தை உருவாக்கிடுவோம்.

வாழ்த்துகளுடன்,

அன்புடன்,

மேலாண்மை இயக்குநர்

உள்ளே...

கொண்டைக்கடலை புதினா சாதம் 14

மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் ஆய்வு மற்றும் பார்வையிடல் 08

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 104 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி 05

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம் 15

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள் 12

மாடித் தோட்டம் அமைத்தல் புதிய முயற்சி 32

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் 27

கவிதை, உடல் நலக் குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவிக் குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவிக் குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் கூட்டமைப்புகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்த செய்திகளை முற்றம் இதழின் வாயிலாக அறிந்து கொள்வது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. முற்றத்திற்கு எங்களது வாழ்த்துகள்.

திருமதி. கலைசெல்வி சந்திரன்,
தங்கம் மகளிர் சுய உதவிக் குழு,
ஆயக்குடி, திண்டுக்கல் மாவட்டம்

'முழு சுகாதார தமிழகம் – முன்னோடி தமிழகம்' என்ற இயக்கத்தின் வாயிலாக தமிழகத்தில் உள்ள கிராமங்களில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை உருவாக்கி வரும், ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள், படக் கதைகள் போன்றவை மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றன.

திருமதி. கோகிலா ரவிச்சந்திரன்,
தங்கம் மகளிர் சுய உதவிக் குழு,
கவுந்தபாடி, ஈரோடு மாவட்டம்.

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பயனுள்ள செய்திகளை தருவதில் முற்றம் இதழ் என்றும் சிறப்பாக செயல்படுகிறது. எங்களைப் போன்றவர்களுக்கு முற்றம் சிறந்த தோழியாகவும், வழிகாட்டியாகவும் இருக்கிறது. மேலும் சிறப்பாக பல்வேறு செய்தி களை வெளியிட முற்றம் வளர வாழ்த்துகள்.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
வெண்ணந்தூர் ஊராட்சி கூட்டமைப்பு,
வெண்ணந்தூர், நாமக்கல் மாவட்டம்.

தமிழகக் கடலோர மக்களின் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திட சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தி வரும் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்த செய்திகளும், பயனாளிகளின் வெற்றிக் கதைகளும் சுனாமி பாதிப்பிலிருந்து எங்களை மீண்டு வரச் செய்திருக்கிறது. முற்றத்திற்கு நன்றி.

நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்,
பவளம் மகளிர் சுய உதவிக் குழு,
சில்வர் பீச், கடலூர் மாவட்டம்.

இப்படிக்கு

மின்னஞ்சல் : wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

www.tamilnadumahalir.org/mutram

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

முற்றம்

மலர் 20 – இதழ் 02 – ஜுன் 2018 – விலை ரூ. 15/–

- கௌரவ ஆசிரியர்
  திரு. **பிரவீன் பி நாயர்,** இ.ஆ.ப.,
  முதன்மை செயல் அலுவலர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
  எஸ். சின்னப்பன்
  செயலர், முற்றம்
- நிர்வாக ஆசிரியர்கள்
  ஜா. ஆனி மேரி சுவர்ணா, இ.ஆ.ப.,
  செயல் இயக்குநர்,
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ச. ப. கார்த்திகா, இ.ஆ.ப.,
  செயல் இயக்குநர்,
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  எஸ். ஜானகி,
  டி.ஆர்.ஓ. / பொது மேலாளர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- ஆசிரியர் குழு
  கோ. லட்சுமிபதி, கூடுதல் இயக்குநர்
  ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

  கா. முத்து மீனாள், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு ஊரக புத்தாக்கத் திட்டம்

  பா. செல்வராஜன், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜா. சம்பத், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  ஜே. கணேஷ் கண்ணா, கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்

  சி. கே. வீரணன், கூடுதல் இயக்குநர்
  தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
- பொறுப்பாசிரியர்
  சு, மகேஷ்வரன்
  மக்கள் தொடர்பு அலுவலர்
- துணை ஆசிரியர் முற்றம்
  ஏ. கண்ணன்
- முதுநிலை கணக்காளர்
  சு. சசிகலா
- பிழை திருத்துபவர்
  எஸ். எஸ். ரவிச்சந்திரன்
- கணினி வடிவமைப்பு
  கோ. குருபிரசாத்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
ஆசிரியர், 'முற்றம்'
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.

தொலைபேசி : 044 – 4211 9497
044 – 2817 3412 / 3413
தொலை நகல் : 044 – 2817 3409

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

ஆசிரியரிடமிருந்து...

தேவை... சிறந்த மருத்துவர்களின் சேவை...!

அன்புள்ள வாசகர்களுக்கு,

இவ்வுலகில் புனிதமான பணிகளில் ஒன்று மருத்துவ பணியாகும். மருத்துவ சேவையின் மூலம் பல உயிர்கள் பாதுகாக்கப்படுகின்றன. எனவேதான், மருத்துவர்களை மக்கள் கடவுளுக்கு இணையாகப் பார்க்கின்றனர். மருத்துவ சேவையின் முக்கியத்துவத்தால்தான் மருத்துவர்களுக்கு சமுதாயத்தில் தனி சிறப்பும், அந்தஸ்தும் நிலவுகிறது.

மிகப்பெரிய மக்கள் தொகையைக் கொண்ட நமது நாட்டிற்கு மருத்துவத்துறையின் பங்கு மிக அத்தியாவசியமான ஒன்று. பல கோடி மக்களின் புழக்கத்தால் மிக அதிகமான சுகாதார கேடுகள் ஏற்படுவது இயற்கையே. குறிப்பாக, சுற்றுப்புறச் சுகாதார கேட்டினால்தான் 60 சதவிகிதத்திற்கும் மேலான நோய்கள் ஏற்பட்டு மிகப்பெரிய பாதிப்புகளை உருவாக்குகிறது. இவ்வாறு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் மருத்துவர்களை நாட வேண்டிய நிலை உருவாகிறது.

நமது நாட்டில் ஒரு மருத்துவரை உருவாக்க அரசாங்கம் பல லட்சங்களை செலவிடுகிறது. ஆனால் இவ்வாறு உருவான மருத்துவர்கள் பெரும்பாலும் அதிகமான மக்கள் வாழும் கிராமங்களில் போலி மருத்துவர்கள் உருவாகி மக்களை ஏமாற்றி பணம் சம்பாதிக்கின்றனர். ஆங்கில மருத்துவம், சித்த மருத்துவம், ஹோமியோபதி, யுனானி மருத்துவம் போன்ற மருத்துவ முறைகள் தற்போது பின்பற்றப்பட்டு வருகின்றன. இவைகளுக்கு மருத்துவர் களும் தனித்தனியாக பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

இந்த மருத்துவ முறைகள் அனைத்துமே நோய்கள் வந்த பின்பு அவற்றை குணமாக்கும் முறைகளாகவே உள்ளன. ஆனால், நோய்கள் வராமல் தடுப்பதற்கு மிக சிறந்தமுறை, நிலையான சுகாதாரத்தை உருவாக்குவதுதான். "சுகாதாரம் என்பது வெறுமனே நோயில்லாமல் இருப்பது மட்டுமே அல்ல. மாறாக, முழுமையான உடல்நலம், மன நலம் மற்றும் சமூக நலம் ஆகியவைகளை சிறப்பாக வைத்திருக்கின்ற நிலைதான் சுகாதாரம்" என உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. இந்த நிலையை அடைவதற்கு பல்வேறு காரணிகளை கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது.

மருத்துவர்கள் வியாதிகளுக்கு மருந்துகள் மட்டுமே கொடுப்பது அல்லாமல், மக்களிடையே சுகாதாரத்தை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பாதுகாப்பான சுகாதார மான சூழலை அனைத்து இடங்களிலும் ஏற்படுத்த வலியுறுத்த வேண்டும். நலன் தரும் சுகாதார நடவடிக்கைகளை கற்றுத் தர வேண்டும். வீடுகளிலும், பணிபுரியும் இடங்களிலும் தூய்மையான சூழ்நிலையை உருவாக்க ஆலோசனைகளை வழங்க வேண்டும். இவ்வாறு செய்பவர்களே சிறந்த மருத்துவர்கள் ஆவார். மருத்துவர்கள் தினத்தை அனுசரிக்கும் இந்த மாதத்தில் நேர்மையாக சேவை செய்யும் அனைத்து மருத்துவர்களுக்கும் முற்றம் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறது. ■

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
பதிப்பாளர் மற்றும் ஆசிரியர், முற்றம்

தமிழ்நாடு மாநில
ஊரக வாழ்வாதார இயக்கம்

25,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு ரூபாய் 25,000/– முதல் ரூபாய் 75,000/– வரை மொத்தம் 104 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்

மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை

அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் அறிவிப்பு

தமிழ்நாடு சட்டப் பேரவையில் 04.06.2018 அன்று ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நகராட்சி நிர்வாகம், சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை மானிய கோரிக்கைகள் மீதான விவாதங்களுக்கு பதிலுரை வழங்கி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் செய்திட்ட அறிவிப்புகள் வருமாறு.

ஊரகப் பகுதிகளில் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 50 கிராம சந்தைகள் அமைத்தல் :

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் தங்கள் விளை பொருட்களை விற்பனை செய்யும் பொருட்டும், சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையிலும் 2018–19ஆம் நிதியாண்டில் ஊரகப் பகுதிகளில் 50 கிராம சந்தைகள் 20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் பணிபுரியும் 12,523 கணக்காளர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் பதிவேடுகள் பராமரிப்பு மற்றும் களப் பணிகள் வழங்கப்பட்டு மாதம் ஒன்றிற்கு மதிப்பூதியமாக 3,000/– ரூபாய் வழங்கப்படும் :

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் / ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் பணிபுரியும் 12,523 கணக்காளர்களுக்கு மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் 12,523 கிராம ஊராட்சிகளில் பதிவேடுகள் பராமரித்தல் மற்றும் களப்பணிகள் மேற்கொள்வதற்காக, மாதம் ஒன்றிற்கு 3,000/– ரூபாய் மதிப்பூதியமாக வழங்க வருடம் ஒன்றிற்கு 45 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவிடப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு ரூபாய் 25,000/– முதல் ரூபாய் 75,000/– வரை மொத்தம் 104 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும் :

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் உள்ள சுய உதவிக் குழுக்கள் ஆற்றல் மேம்பாடு அடையவும், சுய தொழில்கள் மூலம் பொருளாதார முன்னேற்றம் பெறவும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 20,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு ரூ. 25,000 முதல் ரூ. 75,000 வரை மொத்தம் 104 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி 2 018–19ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 13,500 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு ரூபாய் 15,000/– வீதம் ஆதார நிதியாக 20.25 கோடி ரூபாய் வழங்கப்படும் :

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், வங்கிகளின் மூலம் அதிக அளவிலான கடன் கிடைக்கப் பெறவும், ஆதார நிதி வழங்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தில் உள்ள 13,500 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 15,000/– ரூபாய் வீதம் மொத்தம் 20 கோடியே 25 இலட்சம் ரூபாய் ஆதார நிதியாக 2018–19ஆம் ஆண்டில் அரசினால் வழங்கப்படும்.

தமிழ்நாட்டில் 385 வட்டாரங்களிலும் வட்டார அளவிலான கூட்டமைப்பு 96 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தப்படும் :

ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் சமுதாய வள பயிற்றுநர்களை வட்டார அளவில் ஒருங்கிணைத்திடவும், வலுப்படுத்திடவும், நிலைத்த தன்மை அடையச் செய்திடவும் 2018–19ஆம் நிதியாண்டில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 385 வட்டாரங்களிலும் 96 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வட்டார அளவிலான கூட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும்.

வட்டார அளவிலான பயிற்சி மையங்கள் ஏற்படுத்தி 13 கோடியே 34 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் பயிற்சிகள் வழங்கப்படும் :

சமுதாயம் சார்ந்த அமைப்புகளை முன்நிறுத்தி வறுமை ஒழிப்புத் திட்டங்களைச் செயல்படுத்திட வட்டார அளவிலான கூட்டமைப்புகள் அமைக்கப்படுகின்றன. இவ்வமைப்புகள் வட்டார அளவிலான பயிற்சி மையங்களாகவும் செயல்படும். இம்மையங்கள் மூலம் சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்குத் தேவையான அனைத்துப் பயிற்சிகளும் வழங்கப்படும். இதற்காக 2018–19ஆம் நிதி ஆண்டில் 13 கோடியே 34 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் வங்கிக் கடன் இணைப்பை உயர்த்தும் வகையில் இ–மதி (e-Mathi) வலைத்தளம் மேம்படுத்தப்படும் :

2018–19ஆம் நிதியாண்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சேமிப்பு, வங்கிக் கடன், கடன் திருப்பம், கணக்குப் பதிவேடுகள் பராமரிப்பு போன்ற முழு விவரங்களும் உடனுக்குடன் தகவல் பெறும் வகையில் (Real Time Database) தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் இ–மதி (e-Mathi) வலைதளத்தை மேம்படுத்தி பதிவேற்றம் செய்யப்படும். இதன் மூலம் ஊரகப் பகுதியில் உள்ள வங்கிக் கிளைகள் விரைவாகவும், அதிக அளவிலும் குழுக்களுக்கு வங்கிக் கடன்கள் வழங்க இயலும்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் 71ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, 71,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் :

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இளைஞர்களின் முன்னேற்றத்திற்கும், வேலைவாய்ப்பிற்கும் பல்வேறு நலத் திட்டங்களை செயல் படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் 71–வது பிறந்த நாளை முன்னிட்டு 71,000 இளைஞர்களுக்கு திறன் பயிற்சி மற்றும் புதிய வேலைவாய்ப்புகள் வழங்கிட அரசு உரிய நடவடிக்கை எடுத்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் (2018–19) தீன்தயாள் உபாத்தியாய கிராமின் கௌசல்ய யோஜனா (DDU GKY) திட்டத்தின் கீழ் 25,000 ஊரக இளைஞர்களுக்கும் மற்றும் தேசிய வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 12,00 நகர்ப்புற இளைஞர்களுக்கும் பல்வேறு துறைகளில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் பயிற்சிகள் அளிக்கப்பட்டு பணியமர்த்தப்படுவர். மேலும் மாவட்ட அளவில் 59 வேலைவாய்ப்பு முகாம்களும், வட்டார அளவில் வட்டாரத்திற்கு ஒன்று வீதம் 385 முகாம்களும் நடத்தப்பட்டு, அம்முகாம்கள் வாயிலாக 34,000 இளைஞர்களுக்கு பல்வேறு நிறுவனங்களில் பணிமர்வு வழங்கப்படும்.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா 50,000 ரூபாய் வீதம் மொத்தம் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் ஆதார நிதி வழங்கப்படும் :

மகளிர் சுய உதவிக் குழுக்கள் வளர்ச்சி பெறவும், சுய தொழில் மூலம் பொருளாதார முன்னேற்றம் அடையவும், நகர்ப்புறங்களில் உள்ள பகுதி அளவிலான கூட்டமைப்புக்கு ஆதார நிதி வழங்கப்படுகிறது. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 300 பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு தலா 50,000/– ரூபாய் வீதம் ஆதார நிதியாக 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் 2018–19ஆம் நிதியாண்டில் வழங்கப்படும்.

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 10,000/– ரூபாய் வீதம் ஆதார நிதியாக 10 கோடி ரூபாய் வழங்கப்படும் :

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் விடுபட்ட ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அத்தகைய குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், குழுவின் செயல்பாட்டை வலுப்படுத்தவும், வாழ்வாதார வாய்ப்புகளுக்கு வங்கியின் மூலம் கடன் பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தில் உள்ள 10,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000/– ரூபாய் வீதம் மொத்தம் 10 கோடி ரூபாய் ஆதார நிதியாக 2018–19ஆம் ஆண்டில் வழங்கப்படும்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து 25,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் :

2018–19ஆம் நிதியாண்டில் மகாத்மா காந்தி தேசிய ஊரக உறுதித் திட்டத்துடன் ஒருங்கிணைந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் 25,000 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களின் வாழ்வாதாரம் மேம்பட 167.76 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஆட்டுக் கொட்டகை, மாட்டுக் கொட்டகை, நாடெப் உரக்குழிகள் (NADEP) மற்றும் அசோலா பசுந்தீவனம் உற்பத்தி மையம் போன்ற உட்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படும். மேலும் அவர்களுக்குத் தேவையான பயிற்சியும் வழங்கப்படும். இதன் மூலம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் பொருளாதார நிலையும் மேம்பாடு அடையும்.

மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பாடு அடைந்திட 6 மாவட்டங்களில் 70 மீன் வலை பின்னும் கூடங்கள், 10 மீன் உலர் களங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும் :

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ், தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், மீனவர்களின் வாழ்வாதாரம் மேம்பட்டிட, 70 மீன் வலை பின்னும் கூடங்கள், 10 மீன் உலர் களங்கள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகள், 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஏற்படுத்தித் தரப்படும்.

கடலோர ஊராட்சிகளில் கட்டப்படும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகங்களுக்கு, கணினி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் 2 கோடியே 58 இலட்சம் செலவில் அமைத்துத் தரப்படும் :

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்பாட்டில் உள்ள தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் உள்ள, கடலோர ஊராட்சிகளில் கட்டப்படும், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு அலுவலகங்களுக்கு, கணினி உள்ளிட்ட உட்கட்டமைப்பு வசதிகள் 2 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்துத் தரப்படும்.

கடலோரப் பகுதி மக்களுக்கு புதிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திடும் நோக்கில், 129 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக மாற்றப்பட்டு, வாழ்வாதார மேம்பாட்டுக் கடன், 30,000 பயனாளிகளுக்கு 75 கோடி ரூபாய் வழங்கப்படும் :

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் வசிக்கும் கடலோரப் பகுதி மக்களுக்கு, புதிய வாழ்வாதாரங்களை ஏற்படுத்திடும் நோக்கில், 129 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், வங்கிகளின் வியாபார மேம்பாட்டு முகவர்களாக மாற்றப்பட்டு, அவை மூலம் 75 கோடி ரூபாய் வாழ்வாதார மேம்பாட்டுக் கடன், 30,000 பயனாளிகளுக்கு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

1,000 மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்களை ஏற்படுத்தி, கடன் மற்றும் உட்கட்டமைப்பு வசதி போன்றவை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும் :

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் தஞ்சாவூர், திருவாரூர், திருநெல்வேலி, தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில், 1,000 மகளிர் கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அவர்களுக்கு கடன், உட்கட்டமைப்பு வசதி போன்றவை 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

இவ்வாறு சட்டப் பேரவையில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள் அறிவித்தார். ■

நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் 18.05.2018 அன்று நடைபெற்ற 122வது உதகை மலர்க் கண்காட்சி தொடக்க விழா மற்றும் குந்தா நீரேற்று புனல் மின் திட்டப் பணிகள் துவக்க விழாவில் கலந்து கொண்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி அவர்கள், மலர்களால் அமைக்கப் பட்டிருந்த மேட்டூர் அணையின் வடிவமைப்பினைப் பார்வையிட்டார், அதைத் தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் பயனாளிகளுக்கு அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்கள். இந்த விழாவில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் கே. ராஜு அவர்கள், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி. தங்கமணி அவர்கள், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு. எஸ். பி. வேலுமணி அவர்கள், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை அமைச்சர் டாக்டர் வி. சரோஜா அவர்கள், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வேளாண்மைத் துறை முதன்மை செயலாளர் திரு. ககன்தீப்சிங் பேடி, இ.ஆ.ப., அவர்கள், நீலகிரி மாவட்ட ஆட்சியர் திருமதி. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப., அவர்கள் மற்றும் பல்வேறு அரசுத் துறை அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள், மகளிர் சுய உதவிக் குழுவினர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

கிராம வறுமை ஒழிப்புச் சங்கம் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகள் பார்வையிடல்

தமிழ்நாடு ஊரக புத்தாக்க இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திருமதி. எஸ். பி. கார்த்திகா, இ.ஆ.ப., அவர்கள் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலுடன் அமைக்கப்பட்டுள்ள கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் மற்றும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளின் செயல்பாடுகளை 14.05.2018 அன்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

இந்த ஆய்வின் முதற்கட்டமாக கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஊராட்சி ஒன்றியம் காட்டகரம் ஊராட்சியில் செயல்பட்டு வரும்கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், காட்டகரம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன் அவற்றின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடல் மேற்கொண்டார். தொடர்ந்து காட்டகரம் ஊராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் சிறு தொழில்களான ஊறுகாய் தயாரித்தல், கார்மெண்ட்ஸ் மற்றும் நர்சரி ஆகிய வற்றைப் பார்வையிட்டு ஆய்வு செய்து மேலும் சிறப்பாக செயல்பட பல்வேறு ஆலோசனைகளையும் வழங்கினார்.

இந்த ஆய்வின் போது, உலக வங்கியின் வல்லுநர்கள் திருமதி. சாருலதா அவர்கள், திரு. தேவகுமார் அவர்கள் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. எஸ். உமா மகேஸ்வரி அவர்கள் மற்றும் உதவித் திட்ட அலுவலர்கள் உடனிருந்தனர். ■

தமிழ்நாடு மாநில வழங்கல் மற்றும் விற்பனைச் சங்கம், தமிழகம் முழுவதிலுமுள்ள மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்திட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக இணையம் வழியாக மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்ய "மதி அங்காடி – http://mathiangadi.com/ என்ற பெயரில் வலைதளம் ஒன்று துவங்கப்பட்டுள்ளது. பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள சுய உதவிக் குழுக்களின் விபரங்களை இந்த வலைத்தளத்தின் வழியாக ஒருங்கிணைக்கும் பொருட்டு, இந்த வலைத்தளத்தில் உற்பத்தி யாளர் பதிவிற்கு / Producer Registration என்ற Option சென்று உற்பத்தியாளர் தங்களின் விவரங்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். ■

அரசு சித்திரைப் பொருட்காட்சி விற்பனைக் கண்காட்சி

மதுரை மாவட்டத்தில் ஆண்டுதோறும் சித்திரை திருவிழாவையொட்டி தமிழ்நாடு அரசு செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையின் மூலம் சித்திரைப் பொருட்காட்சி நடத்தப்படுகிறது.

இதன்படி 2018–19ம் ஆண்டிற்கான சித்திரைப் பொருட்காட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுவினருடைய உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தும் வகையில் அவர்களுக்காக அரங்குகள் அமைக்கப்பட்டு கட்டாய கண்காட்சியாக நடத்தப்பட்டது.

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செல்லூர் ராஜு அவர்கள், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் துறை அமைச்சர் திரு. ஆர். பி. உதயகுமார் அவர்கள் மற்றும் மதுரை மாவட்ட ஆட்சியர் ஆகியோர் இணைந்து இக்கண்காட்சியினைத் துவக்கி வைத்தனர்.

21.04.2018 முதல் 08.06.2018 வரை நடைபெற்ற இக்கண்காட்சியில் மகளிர் சுய உதவிக் குழுவினர்களுக்கு மொத்தம் 15 அரங்குகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இதில் முதல் அரங்கில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்டங்கள் பற்றி எடுத்துரைக்கும் வகையிலான புகைப்பட கண்காட்சி அரங்கு அமைக்கப்பட்டிருந்தது. மீதமுள்ள 14 அரங்குகளில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உற்பத்திப் விற்பனை செய்யப்பட்டன. ■

அம்மா இருசக்கர வாகன மானியம் வழங்கும் விழா

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் உழைக்கும் மகளிருக்கு மானிய விலையில் அம்மா இருசக்கர வாகனம் வழங்கும் விழா சங்கரன் கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அவர்கள் தலைமையில் 02.06.2018 அன்று நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. இராஜலெட்சுமி அவர்கள் கலந்து கொண்டு 63 பெண்களுக்கு அம்மா இருசக்கர வாகனங்களுக்கான மானியம், 57 சுய உதவிக் குழுக்களுக்கு ஆதாரத் தொகையாக ரூ. 5,70,000/–ம் மற்றும் 41 சுய உதவிக் குழுக்களுக்கு அமுதசுரபி நிதியாக ரூ. 31 இலட்சம் ஆகியவற்றை வழங்கினார். இவ்விழாவில் திருநெல்வேலி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட இயக்குநர் அவர்கள், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

உலக சுற்றுச்சூழல் தின விழா

வேலூர் மாவட்டம்

வேலூர் மாவட்டம், குடியாத்தம் நகராட்சியில், 2018 மே 31 அன்று உலக சுற்றுச்சூழல் நாள் மகளிர் சுய உதவிக் குழுவினரால் கொண்டாடப்பட்டது. அன்றைய தினம் 250க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களைக் கொண்டு உலக சுற்றுச் சூழல் தின விழிப்புணர்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. இதில் திடக்கழிவு மேலாண்மை மற்றும் டெங்கு நோய் தடுப்பு குறித்து எடுத்துரைக்கப்பட்டதுடன், “குப்பைகள் இல்லா நகரத்தை உருவாக்குவோம் – பிளாஸ்டிக் பயன்பாட்டைத் தவிர்ப்போம்” என்ற உறுதிமொழியும் எடுக்கப்பட்டது. ■

வேலை வாய்ப்பு முகாம்கள்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் ஈரோடு மாவட்டம், கொடுமுடி மினி ஹாலில் 28.04.2018 அன்று நடைபெற்ற வட்டார அளவிலான வேலைவாய்ப்பு முகாமினை மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் துவக்கி வைத்தார்.

ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கம், ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மற்றும் வேளாளர் பொறியியல் கல்லூரி ஆகியவை இணைந்து நடத்திய வேலைவாய்ப்பு முகாம் 04.05.2018 அன்று வேளாளர் பொறியியல் கல்லூரியில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அவர்கள் இந்த முகாமினைத் துவக்கி வைத்தார்.

இந்த இரு வேலைவாய்ப்பு முகாம்களிலும் 124 தனியார் நிறுவனங்களும், 1156 இளைஞர்களும் கலந்து கொண்டனர். அவற்றில் தேர்வு செய்யப்பட்ட 599 நபர்களில் 428 நபர்களுக்கு தனியார் நிறுவனங்களில் பணி செய்வதற்கான ஆணைகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சிகளில் ஈரோடு மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள், ஈரோடு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள், கல்லூரி தாளாளர் மற்றும் முதல்வர், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தின விழா

நாமக்கல் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில், நாமகிரிப்பேட்டை வட்டாரம், தொப்பப்பட்டி கிராம ஊராட்சியில் 05.05.2018 அன்று வாழ்வாதாரம் மற்றும் திறன் வளர்ப்பு தினம் விழா கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் 26 மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு வங்கிக் கடன் இணைப்பாக ரூ. 25.85 இலட்சமும், சிறப்பாக செயல்பட்ட ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கிய வங்கிகளுக்கு பாராட்டுச் சான்றிதழ் போன்றவையும் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சிகளில் மத்திய அரசின் சார்பு செயலாளர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் அவர்கள், நாமக்கல் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் பிற துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

மகளிர் சுய உதவிக் குழுக்களின் நர்சரி பண்ணை தொடக்க விழா

தூத்துக்குடி மாவட்ட மகளிர் திட்டம் சார்பாக 66 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கிள்ளிக்குளம் வேளாண்மைக் கல்லூரியில் மாடித் தோட்டம் மற்றும் வீட்டுத் தோட்டம் அமைப்பது குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியினைப் பெற்ற கோவில்பட்டி நகராட்சியினைச் சேர்ந்த 5 நபர்களுக்கு, கோவில்பட்டி ஊராட்சி ஒன்றிய அலுவலக வளாகத்தில் இலவசமாக இடம் ஒதுக்கீடு செய்து தரப்பட்டு, அதில் அவர்கள் நர்சரிப் பண்ணை வைத்துள்ளனர். இந்த நர்சரியில் கீரைகள், மூலிகை மற்றும் காய்கறிச் செடிகளை பயிரிட்டுள்ளனர். மேலும் அழகுச் செடிகள், பூஞ்செடிகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பை. மண்புழு உரம், பஞ்சகாவ்யம், இயற்கை உரங்கள் ஆகியவையும் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

தூத்துக்குடி மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி. பி. ஜே. ரேவதி அவர்கள் இந்த நர்சரியினை 08.06.2018 அன்று திறந்து வைத்தார். இந்நிகழ்வின் போது, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. ஹரிகரமோகன், திரு. முருகானந்தம், அமுதசுரபி கூட்டமைப்பு தலைவி திருமதி. தமிழரசி, கோவில்பட்டி நகராட்சி சுகாதார அலுவலர் திரு. ஸ்டாலின், சுகாதார ஆய்வாளர் திரு. சுரேஷ் ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர். ■

சுய உதவிக் குழுக்கள் மற்றும் இ-சேவை மையத்தின் செயல்பாடுகள் ஆய்வு

இராமநாதபுரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படும் கழுகூரணி அரியனேந்தல் ஊராட்சியில் மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் மற்றும் இ-சேவை மையத்தின் செயல்பாடுகள் ஆகியவற்றை, திருமதி. அமுதா, இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, மேலும் சிறப்பாக செயல்படுவதற்கான ஆலோசனைகளை வழங்கினார். இந்த ஆய்வின் போது, இராமநாதபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்கள், உதவித் திட்ட அலுவலர்கள், மகளிர் சுய உதவிக் குழுவின் உறுப்பினர்கள் உடனிருந்தனர். ■

கீரை சாகுபடியில் சாதனை படைக்கும் ஊத்துக்காடு மகளிர்

காஞ்சிபுரம் மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், ஊத்துக்காடு ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள் கீரை சாகுபடியில் சாதனை படைத்து வருகின்றனர். காஞ்சீபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்களின் அறிவுறுத்தலின்படி காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாசராவ் அவர்களின் தலைமையில் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள அனைத்து பத்திரிக்கை செய்தியாளர்கள் 09.06.2018 அன்று ஊத்துக்காடு பகுதியில் செய்யப்பட்டு வரும் கீரை சாகுபடியினை நேரில் பார்வையிட களப்பயணம் மேற்கொண்டனர்.

இந்தக் களப்பயணத்தில் ஒரு பகுதியாக கீரை சாகுபடி செய்து வரும் மகளிர் சுய உதவிக் குழுவினரிடம் கலந்துரையாடப்பட்டது. அப்போது மகளிர் சுய உதவிக் குழுவினர் கூறும்போது, “எங்கள் ஊராட்சியில் மொத்தம் 30 சுய உதவிக் குழுக்கள் உள்ளன. ஒத்தத் தொழில்குழு மூலமாக கீரை உற்பத்தியில் ஈடுபட விருப்பம் தெரிவித்த 10 குழுக்களை ஒன்றிணைத்து, “ஊத்துக்காடு கீரை உற்பத்தியாளர் பூச்சரம்’ என்ற பெயரில் ஒத்தத் தொழில் குழுவினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் தொடங்கினோம்.

ஊரக வாழ்வாதார இயக்கத்தின் நிதியுதவியில் 4.5 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு எடுத்து, அதில் கீரை சாகுபடி செய்து வருகிறோம். மகளிர் திட்டம் மூலம் ரூ. 1.25 இலட்சம் மனியத்துடன் கடனுதவியாக ரூ. 5 இலட்சம் வழங்கியதுடன், கீரைகளை நேரடியாக விற்பனை செய்வதற்காக பூமாலை வணிக வளாகத்தில் கடை ஒன்றினையும் ஒதுக்கியுள்ளனர்.

நாங்கள் இயற்கை உரத்தினைக் கொண்டு பல்வேறு வகையான கீரைகளை சாகுபடி செய்து வருகிறோம். சுமார் 150 மகளிர் இந்த பணியில் ஈடுபட்டு வருகிறோம். எங்கள் கிராமத்தில் குறிப்பிட்ட பகுதியில் உப்பு மணல் மற்றும் உப்பு நீர் உள்ளதால் கீரைகள் நன்கு வளருகின்றன. நாள் ஒன்றுக்கு சுமார் 2000 கட்டு கீரைகளை விற்பனைக்காக சேகரிக்கப்பட்டு, மொத்த மற்றும் சில்லறை விற்பனை முறையில் காஞ்சிபுரம், சென்னை, செங்கல்பட்டு, மதுராந்தகம் உட்பட சுற்றுவட்டாரங்களில் விற்பனை செய்து வருகிறோம். கீரை சாகுபடி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வரும் சுய உதவிக் குழு மகளிர் ஒவ்வொருவரும் நாள் ஒன்றுக்கு ரூ. 250/. வரை வருவாய் பெற்று வருகின்றனர். எங்களுக்கு இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எங்களின் நன்றி” என்று குறிப்பிட்டனர்.

ஊத்துக்காடு கீரை உற்பத்தியாளர் பூச்சரம் குறித்து காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. ஜி. ஸ்ரீனிவாசராவ் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறுகையில், “ஊத்துக்காடு ஊராட்சியில் 30 குழுக்கள் உள்ளன. மகளிர் திட்டத்தின் மூலம் ஒவ்வொரு குழுவிற்கும் தலா ரூ. 5 இலட்சம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளதுடன், கீரை சாகுபடி குறித்த பயிற்சியும் வழங்கப்பட்டது. விளைவிக்கும் கீரைகளை சந்தைப்படுத்த ஒரு வாகனமும், பொருட்களை விற்பனை செய்வதற்காக மகளிர் சந்தைகளும். பூமாலை வணிக வளாகத்தில் ஒரு கடையும் ஒதுக்கித் தரப்பட்டுள்ளது. இக்குழுவினர் சென்னை வரை சென்று கீரைகளை விற்பனை செய்து வருவதால், மாதந்தோறும் கணிசமான அளவிற்கு வருவாய் பெற்று வருகின்றனர்” என்று குறிப்பிட்டார். ■

வளம் தந்த வாழ்வாதார இயக்கம்

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி வட்டாரம், சிந்தனக்குடி ஊராட்சியில், காலனி தெருவில் வசித்து வருபவர் திருமதி. மேரி, (வயது 36). இவருக்கு பிறவியிலேயே ஒரு கால் வளைந்து சிறுத்து இருக்கும். ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த இவரால் 8ஆம் வகுப்பிற்கு மேல் படிப்பை தொடர முடியவில்லை. தனது உறவினரைத் திருமணம் செய்து கொண்ட இவருக்கு ஒரு மகள் இருக்கிறார். இவரின் ஊனத்தைக் காரண மாக வைத்து இவரின் கணவர் இவரை விட்டு பிரிந்து விட்டார்.

மிகவும் வறுமையான நிலையில் தனது வாழ்க்கையை நடத்தி வந்த இவரை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் களப்பகுதி ஒருங்கிணைப்பாளர் சந்தித்து, வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக தையல் பயிற்சி அளிக்கப்படும் விபரத்தை சொல்லி, இவருக்கு 3 மாத தையல் பயிற்சி அளிக்கப்பட்டது.

பயிற்சியை முடித்த பிறகு தையல் கடை ஒன்றில் பணிபுரிந்து வந்தார் மேரி. திருவாரூர் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் அவர்களின் பரிந்துரை யில் மாவட்ட மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு அலுவலர் அவர்கள், திருமதி. மேரிக்கு ஒரு தையல் இயந்திரம் வழங்கினார்கள். தற்போது மேரி தனது கிராமத்தில் ஒரு தையல் கடை வைத்து, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான ஆடைகளைத் தைத்து தரும் பணி செய்து வருகிறார். இப்பணியின் மூலம் தற்போது கணிசமான வருவாய் பெற்று வரும் திருமதி. மேரி, தனக்கு வளமான வாழ்க்கு வழி ஏற்படுத்தித் தந்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கும், திருவாரூர் மாவட்ட மகளிர் திட்டத்திற்கும் தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார் திருமதி. மேரி. ■

ஊராட்சி அளவிலான கூட்டமைப்பின் சிறப்பான செயல்பாடுகள்

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட இராஜக்காள் மங்கலம் ஊராட்சியில் செயல்படும் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு 2010ஆம் ஆண்டு முதல் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. இக்கூட்டமைப்பில் 30 சுய உதவிக் குழுக்கள் உறுப்பினர்களாக இணைந்து செயல்பட்டு வருகின்றன. அனைத்துக் குழுக்களுக்கும் முறையாக பயிற்சி வழங்கப்பட்டு, வங்கி கடன் இணைப்பு பெற்று, பல்வேறு வகையான தொழில்களை செய்து வருகின்றன. இக்கூட்டமைப்பின் மூலம் இராஜக்காள்மங்கலம் தொடக்க வேளாண்மை வங்கியில் ரூ. 32 இலட்சம் பெற்று, அந்தத் தொகையை உறுப்பினர் குழுக்களுக்கு கடனாக வழங்கப்பட்டு, அதன் மூலம் கூடை முடைதல், ஆடு, மாடு வளர்ப்பு மற்றும் தையல் தொழில் போன்றவற்றை செய்து வருகின்றனர்.

தற்போது கூட்டமைப்பின் சார்பில் மேற்படி வங்கியில் பெருங்கடனாக ரூ. ஒரு கோடி பெற திட்ட அறிக்கை சமர்ப்பித்து, நிதி பெறுவதற்கான நிர்வாக அனுமதியும் பெற்றுள்ளனர். சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகள் மூலம் தாங்கள் சமூக மற்றும் பொருளாதா நீதியாக முன்னேற்றம் அடைந்தள்ளதாக பெருமையுடன் கூறுகின்றனர் இராஜக்காள் மங்கலம் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள். ■

மகிளா கிசான் வேளாண் திட்டம்

திருவள்ளூர் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் மகிளா கிசான் வேளாண் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. கும்மிடிப்பூண்டி வட்டாரம், பாதிரிவேடு ஊராட்சியில் வசிக்கும் திருமதி. சாமந்தி, க/பெ. கோவிந்தன் அவர்களின் ஒரு ஏக்கர் நிலத்தில் மகிளா கிசான் வேளாண் திட்டத்தின் மூலம் கிர்ணி பழம் (Musk Melon) பயிரிடப்பட்டு, இயற்கை முறையில் தயார் செய்யப்பட்ட பஞ்சகாவ்யம், இஞ்சி பூண்டு மற்றும் ஐந்திலை கரைசல் பயன்படுத்தி சாகுபடி செய்யப்பட்டதில், 12 டன் வரை மகசூல் பெறப்பட்டது. பயிரிடப்பட்ட அனைத்து செலவினங்களுக்காக ரூ. 20,000/- வரை செலவிடப்பட்டது. அனைத்து செலவுகளும் போக நிகர இலாபமாக ரூ. 30,000/- வரை கிடைத்துள்ளது என்று பெண் விவசாயியான திருமதி. சாமந்தி மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறார். அடுத்த பருவத்திற்கும் இயற்கை முறையைப் பயன்படுத்தி விவசாயம் செய்வதற்கு இப்பகுதியில் உள்ள பெண் விவசாயிகள் தயாராகி வருகின்றனர். ■

வைரஸ் தாக்குதலில் இருந்து தப்பிக்க...

மாறிவரும் சுற்றுச்சூழலால் மக்கள் பல்வேறு வகையான நோய்த்தாக்குதலுக்கு ஆளாகி வருகின்றனர். தற்போது வைரஸ் தாக்குதலாலும் நோய்கள் அதிகரித்து வருகின்றன. வைரஸ் தாக்குதலில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ள நமது சமையலறையில் இருக்கும் பொருட்களைப் பயன்படுத்தி பக்க விளைவுகளற்ற நோய் எதிர்ப்பு சக்தியை பெற உதவும் வழிகள் குறித்து இப்பகுதியில் நாம் காணலாம்.

மிளகு 4, லவங்கம் 3, இஞ்சி 1 துண்டு ஆகியவற்றை நன்றாகத் தட்டி சாறு எடுத்துக் கொள்ளவும். ஒரு பாத்திரத்தில் தேவையான அளவு தண்ணீர் எடுத்து, அதனுடன் சிறிது மஞ்சளையும், எடுத்து வைத்துள்ள சாற்றினையும் சேர்த்து, அடுப்பில் வைத்து நன்கு கொதிக்க விடவும். நன்கு கொதித்ததும் துளசி இலைகள் 5 போட்டு அடுப்பில் இருந்து இறக்கி வைத்து. ஆறியதும் குடிக்கவும். வாரம் ஒரு முறை இவ்வாறு செய்து குடித்து வந்தால் எந்தவித வைரஸ் தாக்குதலில் இருந்தும் காத்துக் கொள்ளலாம்.

மஞ்சள் மிகச் சிறந்த மருந்துப் பொருள் ஆகும். ஒரு டம்ளர் தண்ணீரில் கால் ஸ்பூன் மஞ்சள் கலந்து, நன்றாகக் கொதிக்க வைத்து ஆறியதும் குடித்து வந்தால் பசி, தூக்கம், மூட்டு வலி, மூட்டுத் தேய்மானம், மன உளைச்சல், புற்றுநோய் சம்பந்தப்பட்ட பிரச்சனைகள் தீரும்.

நாம் குளிக்கும் நீரில் இரவில் வேப்பிலைகளைப் போட்டு வைத்து, காலைகுல் அந்த நீரில் குளித்து வந்தால் சரும பிரச்சனைகள் தீரும்.

வாரம் ஒருமுறை கொய்யா இலைகளை தண்ணீரில் போட்டு அந்தத் தண்ணீரை நன்றாகக் கொதிக்க வைத்து குடித்து வந்தால், உடலில் உள்ள கழிவுகள் மற்றும் அலர்ஜி போன்றவை நீங்கும்.

இஞ்சி சாறு மற்றும் தேன் ஆகியவற்றை தேவையான அளவு தண்ணீரில் கலந்து குடித்து வரலாம்.

தேவையான அளவு தண்ணீரில் பப்பாளி இலைகளை சிறிய அளவில் நறுக்கிப் போட்டு, தண்ணீர் பாதி அளவு வரும் வரை நன்கு கொதிக்க விடவும். பின்னர் அந்தத் தண்ணீரை வடிகட்டி குடித்து வந்தால் நோய்க்கிருமிகளின் தாக்குதல் குறையும். வாரம் ஒருமுறை இவ்வாறு செய்யலாம்.

வேப்பங்கொழுந்து 4, மிளகு 2, கால் ஸ்பூன் மஞ்சள் தூள் ஆகியவற்றை சேர்த்து நன்றாக அரைத்து குழந்தைகளுக்கு சிறிய உருண்டைகளாகவோ அல்லது தண்ணீரில் கலந்தோ சாப்பிடக் கொடுக்கலாம். கசப்பை தவிர்க்க வேண்டுமெனில் தேன் கலந்து கொடுக்கலாம். மாதம் ஒருமுறை இவ்வாறு செய்து வந்தால் உடலில் உள்ள நச்சுக்கள் நீங்கும். ரத்தம் சுத்தமாகும். நோய்க்கிருமிகளின் தாக்குதலில் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளலாம்.

விஷக் காய்ச்சல் பாதிப்பிற்குள்ளானவர்கள், 2 டம்ளர் தண்ணீரில் பவளமல்லி இலை, பூ, தண்டு ஆகியவற்றுடன் சிறிதளவு பனங்கற்கண்டு சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டிக் குடித்தால் காய்ச்சல் குணமாவதுடன், ஜீரண சக்தி அதிகரித்து குடலில் உள்ள கழிவுகள் வெளியேறும்.

காய்கறி, கீரை ஆகியவற்றில் சூப் வைத்து அடிக்கடி குடிக்கலாம். அவசியம் பூண்டு மற்றும் இஞ்சி சேர்த்துக் கொள்ள வேண்டும்.

மேற்கண்டவற்றை பயன்படுத்தும் நாட்களில் மசாலாப் பொருட்கள், மாமிசம், துரித உணவுகள் போன்றவற்றை அவசியம் தவிர்க்க வேண்டும். ■

கொண்டைக்கடலை புதினா சாதம்

தேவையான பொருட்கள்

அரிசி – 1 கப், கொண்டைக்கடலை – 1/2 கப், தக்காளி – 1, வெங்காயம் – 1, பிரிஞ்சி இலை – 1, பச்சை மிளகாய் – 5, இஞ்சி பூண்டு விழுது – 1 டீஸ்பூன், மிளகாய்த் தூள் – 1/2 டீஸ்பூன், தனியா தூள் – 1/4 டீஸ்பூன், புதினா இலை – ஒரு கைப்பிடி, எலுமிச்சைச் சாறு – 1/2 டீஸ்பூன், எண்ணெய், நெய், உப்பு – தேவையான அளவு,

செய்முறை

அரிசி, கொண்டைக்கடலை ஆகியவற்றை நன்றாகக் கழுவி ஊற வைக்கவும். தக்காளி, வெங்காயம், புதினா ஆகியவற்றை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். அடுப்பில் ஒரு பாத்திரத்தை வைத்து அதில் கொண்டைக் கடலையை போட்டு வேகவைத்துக் கொள்ளவும். குக்கரை அடுப்பில் வைத்து அதில் எண்ணெய், நெய் ஆகியவற்றை ஊற்றி சூடுபண்ணவும். பிறகு அதில் வெங்காயம், பிரிஞ்சி இலை ஆகியவற்றைப் போட்டு நன்கு வதக்கவும். பின்னர் இஞ்சி பூண்டு விழுதை சேர்த்து வதக்கவும். தொடர்ந்து தக்காளியை சேர்த்து வதக்கியவுடன், மிளகாய் தூள், தனியா தூள் ஆகியவற்றை அதில் சேர்த்து வதக்கவும்.

அடுத்து அதில் 2 கப் தண்ணீர் ஊற்றி அதனுடன் அரிசியையும், உப்பையும் சேர்த்து வேக விடவும். அரிசி அரை வேக்காடு வெந்தவுடன் அதில் வேகவைத்த கொண்டைக் கடலை, நறுக்கி வைத்துள்ள புதினா இலை, எலுமிச்சைச்சாறு ஆகியவற்றை சேர்த்து கலக்கி சிறு தீயில் நன்றாக வேகவிடவும். கடைசியாக சிறிது நெய் சேர்த்து கிளறி இறக்கி, சூடு ஆறியதும் பரிமாறவும். சுவையும் சத்தும் நிறைந்த கொண்டைக்கடலை புதினா சாதத்தை அனைவரும் விரும்பி சாப்பிடுவார்கள். ■

பயனுள்ள குறிப்புகள்

துளசி இலை போடப்பட்ட நீரை தினமும் குடித்து வந்தால், தொண்டைப் புண் ஏற்படாது. குளிக்கும்நீரில்துளசிஇலைகளைப்போட்டுகுளித்தால்சருமத்தில்உள்ளசிறுதழும்புகள் மறையும். பல் வலி வந்தால், துளசி இலை 2, கொஞ்சம் உப்பு மற்றும் மிளகுத் தூள் ஆகியவற்றை வலி இருக்கும் இடத்தில் வைத்து அழுத்தினால், பல் வலி குறையும்.

கடுமையான இருமல் இருந்தால், 3 கப் தண்ணீருடன் வெற்றிலையையும் மிளகையும் சேர்த்து கொதிக்க வைத்து குடித்து வரவும்.

கொய்யா இலைகளை மென்று தின்றால் வயிற்றுப் போக்கு உடனடியாக நிற்கும்.

இருமல் மற்றும் காய்ச்சலால் அவதிப்படும் குழந்தைகளுக்கு நீருடன் தேனைக் கலந்து கொடுத்தால், இருமலும் காய்ச்சலும் குறையும். ■

கீரைகளின் பயன்கள்

காய்கறிகள் வாங்கச் செல்லும் நம்மை முதலில் இழுப்பது பச்சைப் பசேல் கீரைகள் தான். கீரை வளர்ப்பது மிக எளிது. மிகக் குறுகிய காலத்தில் அறுவடை செய்து விற்பனை செய்து விடலாம். கீரைகளை நம் வீட்டிலேயே எளிதில் வளர்க்கலாம். நமது அன்றாட உணவில் கீரை சேர்த்துக் கொள்வது நம் உடலுக்கு மிகவும் நன்மையைத் தரும். கீரைகளை சாப்பிடுவதால் கிடைக்கும் நன்மைகள் குறித்து காணலாம்.

அரைக் கீரை

இரத்தத்தை உற்பத்தி செய்யும், கபத்தை உடைத்து வெளியேற்றும், வாத நோய் தணிக்கும்.

அகத்திக் கீரை

பித்தம் குணமாகும். ஜீரணசக்தியை உண்டு பண்ணும், இழந்த பலத்தை மீட்டுத் தரும். மலத்தை இளக்கி வெளியேற்றும். வைட்டமின் ஏ மற்றும் கால்சியம் அதிக அளவில் இருப்பதால் உடல் வளர்ச்சியும், கண் பார்வை தெளிவும், எலும்பு பலமும் கிடைக்கும்.

ஆரைக் கீரை

அளவு மீறிப் போகும் சிறுநீரைக் கட்டுப்படுத்தி, சமநிலைக்குக் கொண்டு வரும். பித்தக் கோளாறுகளைப் போக்கும்.

பொன்னாங்கண்ணி கீரை

மேனி பிரகாசிக்கும். தினசரி இந்தக் கீரையை சூப் வைத்து அருந்தினால் உடல் வலு பெறும்.

மணத்தக்காளி கீரை

குடல் புண், வாய்ப்புண் போன்றவற்றை ஆற்றும். சின்ன வெங்காயத்துடன் இந்தக் கீரையை சேர்த்து, சமைத்து சாப்பிட்டால் புண்கள் விரைவில் ஆறும்.

முளைக்கீரை

அடிக்கடி உணவில் இந்தக் கீரையை சேர்த்து சாப்பிட்டு வந்தால், இளநரை மறையும்.

கருவேப்பிலை

நாள்தோறும் உணவில் ஏதாவது ஒரு வடிவில் கருவேப்பிலையை சேர்த்துக் கொண்டால், இளமைத் தோற்றம் நிலைத்து நிற்கும்.

புதினா

இதில் இரும்புச் சத்து நிறைந்திருப்பதால், இரத்தத்தை சுத்தம் செய்வதோடு, புதிய இரத்தத்தையும் உண்டு பண்ணும். புதினாவை நசுக்கிப் போட்டு கசாயம் வைத்து சாப்பிட்டால், இளமையுடன் வாழலாம். ■

முழு சுகாதார தமிழகம் முன்னோடி தமிழகம்

பூனாவில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைக்க 16.05.2018 முதல் 17.05.2018 வரை இரண்டு நாள் கருத்தரங்கம்

மத்திய குடிநீர் வழங்கல் மற்றும் சுகாதார அமைச்சகம், மகாராஷ்ட்ரா மாநிலம், பூனா மாவட்டத்தில் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைக்க வேண்டிய உத்திகள் குறித்து 16.05.2018 முதல் 17.05.2018 வரையில் இரண்டு நாள் கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த இரண்டு நாள் கருத்தரங்கிற்கு தமிழ்நாட்டில் இருந்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப., அவர்களுடன், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரகத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜி. லட்சுமிபதி, கன்னியாகுமரி மாவட்ட கூடுதல் ஆட்சியர் திரு. எம். ஆர். ராகுல்நாத், இ.ஆ.ப., மதுரை மாவட்ட கூடுதல் ஆட்சியர் திரு. எஸ். பி. அம்ரித், இ.ஆ.ப., மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் இயக்குநர் திரு. வி. ஜெயக்குமார் அவர்களும் பங்கேற்றனர். ■

இந்த இரண்டு நாள் கருத்தரங்கின் ஒரு பகுதியாக பூனா மாவட்டத்தில் உள்ள பந்தேவாடி என்ற கிராம ஊராட்சியில் இரு குழி கழிப்பறையிலிருந்து, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் இயக்குநரகத்தின் கூடுதல் இயக்குநர் திரு. ஜி. லட்சுமிபதி மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் இயக்குநர் திரு. வி. ஜெயக்குமார் ஆகியோர் மக்கிய உரத்தை எடுத்து சுகாதார விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் 21.05.2018 முதல் 23.05.2018 வரை சுகாதார ஊக்குநர்களுக்கான புத்தாக்கப் பயிற்சி

ஊரகப் பகுதிகளில் சிறப்பாக பணியாற்றி வரும் சுகாதார களப் பணி ஊக்குநர்களுக்கு சுகாதார களப் பணியில் திறன்பாட்டை அதிகரிக்க மூன்று நாள் புத்தாக்கப் பயிற்சி 21.05.2018 முதல் 23.05.2018 வரை காஞ்சிபுரம் மாவட்டம், மறைமலை நகரில் உள்ள மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தில் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் உள்ள ஊரகப் பகுதிகள் பெரும்பாலும் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையை எட்டியுள்ள நிலையில், ODF நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உருவாக்க யுத்திகளை கற்றுத் தரும் இதுபோன்ற பயிற்சிகள் முக்கியத்துவம் வாய்ந்தவை ஆகும்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் சிறப்பாக களப்பணியாற்றி வரும் மூன்று சுகாதார களப் பணி ஊக்குநர்கள் வரவழைக்கப்பட்டு, மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்திற்கு வரவழைக்கப்பட்டு ODF-இன் நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மைக்கு ஏற்பு உத்திகள் குறித்து பயிற்றுவிக்கப்பட்டனர்.

சமூக சுகாதார அணுகுமுறையில் முன்னிலைப் பயிற்று நிறுவனமாக விளங்கும் ஃபீட்பேக் பவுண்டேசன் நிறுனத்திலிருந்து, திரு. பிரேந்தர் அவர்களின் குழுவினர் சுகாதார ஊக்குநர்களுக்கு பயிற்சி அளித்தனர்.

கீழ்காணும் முக்கிய அம்சங்களில் ஊக்குநர்கள் பயிற்றுவிக்கப்பட்டனர்.

- இன்றைய ODF நிலையை கண்டறிவது.
- சுகாதாரம் குறித்த பழக்க வழக்கங்களை மக்களிடையே மேற்பார்வை செய்தல்
- சுகாதாரம் குறித்து ஊரகப் பகுதி மக்களின் மனமாற்றம் மற்றும் அதன் நிலைகள் குறித்து ஆய்வு செய்தல்
- ODF நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை உறுதிப்படுத்துவது
- ODF நிலையை சரிபார்க்கப்படும் முறை

மேற்கண்ட தலைப்புகளில் பயிற்சியாளர்கள் செய்முறை விளக்கத்தின் மூலமாகவும், களப்பணி மூலமாகவும் ஊக்குநர்களை பயிற்றுவித்தனர். ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநகரம் மற்றும் யுனிசெப் நிறுவனம் இணைந்து நடத்திய இந்தப் புத்தாக்கப் பயிற்சி மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

முக்கியமாக ஊக்குநர்கள் தங்கள் களப் பணியில் இதுவரை எவ்வாறு செயல் பட்டு வந்தனர், மேலும் அவர்களின் பணியை சிறப்புற செய்வதற்கான உத்தி கள் இந்தப் பயிற்சியில் விவாதிக்கப்பட்டது. மேற்கண்ட நோக்கங்களை விவாதித்தப்பின் ஊக்குநர்கள் ODF நிலைத்த மற்றும் நீடித்தத் தன்மையை தக்க வைக்கத் திட்டம் தீட்டினர். அனைத்து ஊக்குநர்களும் இந்தப் பயிற்சியின் மூலம் ODF நிலையைத் தக்க வைக்க தெளிவான புரிதலுடன் சென்றது இந்தப் பயிற்சியின் முக்கியத்துவமாகும்.

மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனத்தின் இயக்குநர் திருமதி. மாதவி அவர்கள் இந்தப் பயிற்சியினைத் துவக்கி வைத்து, சுகாதாரத்தில் பெண் ஊக்குநர்களின் முக்கியத்துவம், அவர்களின் பங்களிப்பு குறித்து பேசினார். களப்பணியுடன் நடைபெற்ற இந்த பயிற்சியில் யுனிசெஃப் நிறுவனத்திலிருந்து திரு. டிதல்பார்மர் மற்றும் திரு. சாதிக் அகமது ஆகியோர் கலந்து கொண்டனர். ■


விடுமுறையில் தன் பாட்டி வீட்டுக்கு வந்திருந்தான் ரமேஷ்.
வெற்றி
தன் மாமா மகன் ரவியுடன் விளையாடிக்கொண்டிருந்தவன்...
... இயற்கையின் அழைப்புக்காகக் கழிப்பறையைத் தேடினான்
ஏ... நான் ஒரு ஆட்டம் ரெஸ்ட்டுப்பா!
கழிப்பறையைப் பார்த்தவனுக்கு அதிர்ச்சி. அங்கே பழைய தேவைப்படாத பொருட்களை எல்லாம் அடைத்து, குடோன்போல் காட்சி அளித்தது.
என்ன ரவி... உங்க வீட்டுக் கழிப்பறை இப்படியிருக்கு?
அது ஒரு வருஷமா இப்படித்தான் இருக்கு. ஏதோ அடைப்பு இருக்காம். எங்க அப்பா அதைச் சரி பண்ணாமலே விட்டுட்டாங்க. நீ வா. நாம காட்டுப் பக்கம் போகலாம்.
வயசான காலத்துல அவ்ளோ தூரம் நடக்கமுடிலேன்னு சொன்னா எங்க கேக்கான் உன் மாமன்
இரவில் தன் மாமாவிடம் பேசினான் ரமேஷ்.
நான்தான் சொன்னேனே... இதெல்லாம் நமக்குச் சரிப்பட்டுவராதுப்பா. எல்லாம் இவனாலதான்.
கக்கூஸ் கட்டி ஆறு மாசத்துல சங்சன் பாக்ஸ்ல அடைப்பாம். நம்ம வேலையைப் போட்டுட்டு அதை ஆராய்ச்சி பண்ணிட்டு இருக்கமுடியுமா?
ஏன் மாமா... இவ்ளோ பெரிய ஊர்ல கொத்தனார் வேலை பார்க்கிறவங்க யாரும் இல்லையா


யாரையாவது வச்சி முதல்ல இதைச் சரி பண்ணுங்க. அதுதான் மாமா ஆரோக்கியம்.
என்னப்பா சொல்றே?
உங்களுக்குத் தெரியுமா...கழிப்பறை பயன்படுத்துற பிள்ளைங்கதான் நோய்வாய்ப்படாம ஆரோக்கியமாவும் புத்திசாலிகளாவும் இருக்காங்களாம்.
சரி அதை விடுங்க... பாட்டியைப் பாருங்க. வயசான காலத்துல, ஒரு அவசரத்துக்கு அவங்களால காட்டுக்கும் ரோட்டுக்கும் ஓட முடியுமா?
ஹுக்கும்.. நல்லாக் கேளு.
வெரிகுட்! நல்லாச் சொல்லு உன் மாமனுக்கு!
இதுல இவ்ளோ விஷயம் இருக்கா...
நம்ம குடும்ப ஆரோக்கியத்துக்கு அதுதான் முக்கியம்னா அதை உடனே ரெடி பண்ணிடுவோம்.
எனக்குத் தெரிஞ்ச ஒரு கொத்தனார் இருக்காரு. இப்பவே போனைப் போட்டுப் பேசுறேன்.
ஹையா!
ரமேஷின் வெற்றி ரவி குடும்பத்தின் வாழ்க்கையை மாற்றியது
முற்றும்

களப்பணியின் குரல்கள்

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமங்களில் சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் குறித்து மற்றும் திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையைத் தக்க வைத்திடவும் கலைக்குழுவினர்களின் மூலமாக விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மூன்று வட்டாரங்களில் உள்ள கிராம வறுமை ஒழிப்பு சங்கம் மற்றும் ஊக்குநர்களுக்கு சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் குறித்த பயிற்சி வழங்கப்பட்டது. நாள்: 15.05.2018

தேனி மாவட்டத்தில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் NYK ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் NSS ஒருங்கிணைப்பாளர்களுக்கு சுகாதார அமைச்சகம் மற்றும் மனிதவள மேம்பாட்டு அமைச்சகம் இணைந்து துவக்கப்பட்ட மாணவர்களின் தூய்மை பாரத கோடைகால பங்களிப்புத் திட்டத்தினைப் பற்றி எடுத்துரைக்கப்பட்டது. நாள்: 18.05.2018

திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு மாணவர்களின் தூய்மை பாரத கோடை பங்களிப்பு நிகழ்ச்சியின் முக்கியத்துவம், மாணவர்களின் பங்களிப்பு போன்ற முக்கிய குறிப்புகளை பகிர்ந்து கொண்டனர். நாள்: 18.05.2018

களப்பணியின் குரல்கள்

நாகப்பட்டினம் மாவட்டம், செம்பனார் கோவில் வட்டாரத்தில் உள்ள அங்கன்வாடி பணியாளர்களுக்கு சுகாதாரம் மற்றும் தன் சுத்தம் நீடித்து மற்றும் நிலைத்து இருந்திட ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது. நாள்: 21.05.2018

காஞ்சிபுரம் மாவட்டம், கயரம்பேடு கிராமத்தில் உள்ள குடும்பங்களில் சிறந்த முறையில் கழிவுகளை மக்கும் மற்றும் மக்கா குப்பைகள் என பிரித்து சிறந்த முறையில் திடக் கழிவு மேலாண்மையை நடத்தி வரும் குடும்பங்களுக்கு மரக்கன்றுகள் பரிசாக வழங்கப்பட்டது. நாள்: 26.05.2018

SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிற்சியாளரான திரு. அரவிந்த் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்டம், ஊரப்பாக்கம் ஊராட்சியில் பழுதடைந்து இருந்த ஒருங்கிணைந்த மகளிர் குழந்தைகள் சுகாதார வளாகத்தை மக்களின் உதவியுடன் புனரமைத்து வெற்றி கண்டுள்ளார். இடம்: ஊரப்பாக்கம் ஊராட்சி, காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், காஞ்சிபுரம் மாவட்டம். நாள்: 28.05.2018

காஞ்சிபுரம் மாவட்டம், கயரம்பேடு கிராமத்தில் SRM அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனத்தில் பயிலும் மாணவர்கள் குழுவாக இணைந்து, தூய்மை இந்தியாவின் கருத்துக்களை எடுத்துச் சொல்லும் வகையில் ஊராட்சி மன்ற அலுவலகத்தின் சுவற்றில் வண்ண ஓவியங்களை வரைந்தனர். நாள் : 28.05.2018

களப்பணியின் குரல்கள்

உலக மாதவிடாய் தூய்மை நாளை முன்னிட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தின் துணை மாவட்ட ஆட்சியர் திருமதி. சரயு, இ.ஆ.ப., மற்றும் திருமதி. வனஜா, தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோர் இணைந்து, மாதவிடாய் தூய்மை நாளின் முக்கியத்துவம் மற்றும் அவற்றை பற்றிய விழிப்புணர்வு குறித்து சொற்பொழிவு வழங்கப்பட்டது.

நாள் : 28.05.2018

கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள கல்லூரி மாணவர்கள் தூய்மை பாரத கோடைகால பங்களிப்பு நிகழ்ச்சியில் பங்கேற்று, அப்பகுதியினை சுத்தம் செய்வதில் பெரும் பங்கேற்றனர்.

நாள் : 31.05.2018

திருவண்ணாமலை மாவட்டம், தாமரைப்பாக்கம் ஊராட்சியை திறந்தவெளி மலம் கழித்தலற்ற நிலையினை அடைந்தபின் அந்நிலையினை நிலைத்திருந்திட இரு உறிஞ்சுக் குழி கழிப்பறையின் வரைபடம் மூலம் அதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வு நிகழ்ச்சி வழங்கப்பட்டது. நாள் : 31.05.2018

வங்கிகளில் கல்விக் கடன் பெறுவது எப்படி?

இந்தியாவின் மிகப் பெரிய தேசிய வளம், அதன் இளைஞர்கள்தான். நன்கு படிக்கிற மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்பதில் பணப் பிரச்சனைகள் ஏற்பட்டால் அவர்களுக்கு உதவுவதற்காக கல்விக் கடன் வழங்கும் திட்டம் கடந்த 2005ஆம் ஆண்டு முதல் அமலில் இருந்து வருகிறது. மத்திய அரசு, ரிசர்வ் வங்கியின் அறிவுரையின்படி சுமார் 27 தேசியமயமாக்கப்பட்ட பொதுத்துறை வங்கிகளும், சில தனியார் வங்கிகளும் மாணவர்களுக்கு கல்விக் கடன் வழங்கி வருகின்றன. ஒவ்வொரு பகுதியிலும் குறிப்பிட்ட வங்கி கல்விக் கடன் வழங்க வேண்டும் என்று மாநில அரசும் நிர்ணயித்துள்ளது. இந்த தகவலை வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்தும் பெற்றுக் கொள்ளலாம். ஒவ்வொரு வங்கியும் கடன் பெறுவதற்குச் சில தகுதிகளை வகுத்திருக்கிறது. வட்டி விகிதம், அதனைத் திருப்பிச் செலுத்தும் விதம் போன்றவைகள் வங்கிக்கு வங்கி மாறுபடலாம்.

வங்கிக் கடன் பெற மாணவர்களுக்கு அடிப்படை தகுதிகள் ஏதேனும் உள்ளதா?

விண்ணப்பிப்பவர் இந்தியக் குடிமகனாக இருக்க வேண்டும். நல்ல மதிப்பெண்ணுடன் எந்த கல்வி கற்கிறாரோ அதற்கான முழு தகுதியும் பெற்றிருக்க வேண்டும்.

எந்தெந்தப் படிப்புகளுக்கு கல்விக் கடன் கிடைக்கும்?

பள்ளி, இளநிலை பட்டப் படிப்புகள், முதுநிலைப் பட்டப் படிப்புகள், முனைவர் பட்டப் படிப்புகள், பொறியியல், விவசாயம், மருத்துவம், கால்நடை மருத்துவம், சட்டம், பல் மருத்துவம், மேலாண்மை, கணினித்துறை, பல்கலைக் கழகங்களால் அங்கீகரிக்கப்பட்ட கணினி சான்றிதழ் படிப்புகள், CA, ICWA, CFA போன்ற படிப்புகள் போன்றவைகளுக்கும், வெளிநாடுகளில் உள்ள பல்கலைக் கழங்களில் அங்கீகரிக்கப்பட்ட சில படிப்புகளுக்கும் கல்விக் கடன் வழங்கப்படுகிறது.

வங்கிக் கடனுக்கு விண்ணப்பிக்க என்னென்ன ஆவணங்கள் தேவை?

மாணவரின் எஸ்.எஸ்.எல்.சி., பிளஸ் 2 மதிப்பெண்கள் சான்றிதழ், கல்லூரியில் சேருவதற்கான அட்மிஷன் கார்டு, கல்லூரியின் கட்டணங்கள் மற்றும் இதர செலவுகள் குறித்த விவரம், புகைப்படங்கள், 6 முதல் 12 மாதங்கள் வரையிலான வங்கி அறிக்கை/கடந்த சில வருடங்களுக்கான வருமான வரி அறிக்கை, வருவாய் ஆதாரம், சொத்துக்கள், கடன்கள், வங்கிக் கணக்கு இல்லையெனில் மாணவரின் இருப்பிடச் சான்று, அடையாளச் சான்றுகள் வழங்கப்பட வேண்டும்.

எவ்வளவு கல்விக் கடன் வழங்கப்படுகிறது?

பொதுவாக உள்நாட்டுப் படிப்புகளுக்கு நான்கு லட்சம் முதல் ஏழரை இலட்சம் ரூபாய் வரையிலும், வெளிநாட்டு படிப்புகளுக்கு ரூ. 20 லட்சம் வரையிலும் கல்விக் கடன் வழங்கப்படுகிறது. வங்கிக் கடன் தொகை குறித்து வங்கி அலுவலர்களிடம் விபரம் அறிந்து கொள்ளலாம்.

கல்விக் கடனை திருப்பச் செலுத்துவது எவ்வாறு?

படிப்பை முடிக்கும் வரையில் கல்விக் கடனை திரும்பச் செலுத்த வேண்டியதில்லை. படிப்பு முடித்து ஒரு வருடம் அல்லது வேலைக்குச் சென்று 6 மாதம். இதில் எது முதலில் வருகிறதோ பின்னர் 6 முதல் 12 மாதம் வரை கால அவகாசம் வழங்கப்படும். அதற்குப் பின்னர் கடனை திரும்பச் செலுத்தினால் போதுமானது.

படிப்பை பாதியில் நிறுத்தினாலோ, ஒரு வருடத்திற்குள் வேலை கிடைக்கவில்லை என்றாலோ கடனை எப்படி திரும்ப செலுத்த வேண்டுமா?

இத்தகைய சூழ்நிலையில் உடனடியாக கல்விக் கடனை வங்கிக்கு கட்ட வேண்டும். இருப்பினும் வங்கியில் இது குறித்த விபரங்களை அறிந்து கொள்ளலாம்.

கல்விக் கடனுக்கான வட்டி எவ்வளவு கணக்கிடப்படும்?

படிப்பை முடிக்கும் வரை சாதாரண வட்டி விகிதம்தான் கணக்கிடப்படும். இந்தக் கால கட்டத்தில் நீங்கள் விரும்பினால் வட்டியை மட்டும் வங்கிக்கு செலுத்தலாம் அல்லது செலுத்தாமலும் இருக்கலாம். வேலை கிடைத்த பின் வட்டியும் அசலும் வங்கிக்கு செலுத்த வேண்டும். இருப்பினும் வங்கியின் அலுவலர்களிடம் வட்டி குறித்த விபரங்களை கேட்டுக் கொள்வது அவசியம்.

கல்விக் கடன் பெறுவதற்கு சொத்துக்களை ஈடாக வைக்க வேண்டுமா?

1. 4 லட்சம் ரூபாய் வரையிலான கடன்களுக்கு ஈடாக எதையும் வைக்கத் தேவையில்லை. அதேசமயம் கடன் ஆவணங்களில் மாணவர், அவருடைய பெற்றோர் அல்லது காப்பாளர் கையெழுத்திட வேண்டும்.
2. ரூ. 4 லட்சத்துக்கு மேல், ரூ. 7.50 லட்சத்துக்குள் கடன் பெற்றால், இந்த ஆவணங்கள் மட்டும் போதாது. கூடுதலாக, நீங்கள் கடனை திரும்பச் செலுத்தி விடுவீர்கள் என்று உத்தரவாதம் அளித்து ஒருவர் கையெழுத்திட வேண்டும்.
3. ரூ. 7.5 லட்சத்துக்கு மேல் உள்ள கடன்களுக்கு நீங்கள் ஏதேனும் சொத்து அல்லது முதலீட்டுப் பத்திரங்களை வங்கிக்குத் தர வேண்டியிருக்கும். (உதாரணமாக தேசிய சேமிப்புப் பத்திரங்கள், காப்பீட்டு பத்திரங்கள், வங்கி முதலீடுகள், வீடு, நிலம், தங்கம் போன்ற சொத்துக்கள்)

நீங்கள் வழங்கும் சொத்துக்கள் அல்லது முதலீட்டுப் பத்திரங்கள் தான் வங்கிக்கான உத்தரவாதம். நீங்கள் கடனை திரும்பச் செலுத்தாவிட்டால், வங்கி நீங்கள் ஈடாக வைத்த சொத்துக்களை விற்றுத் தங்களுக்கு சேர வேண்டிய தொகையை திரும்பப் பெற்றுக் கொள்வார்கள். ரூ. 4 லட்சத்திற்கு மேற்பட்ட கடன்களுக்கு வங்கிகள் தனிநபர் உத்தரவாதம் மற்றும் சொத்து / முதலீட்டுப் பத்திரங்களை ஈடாக கேட்கலாம். நீங்கள் கடனை திரும்பச் செலுத்தாதபட்சத்தில் வங்கி உங்களுக்கு உத்தரவாதம் வழங்கியவர்களிடமிருந்து கடன் தொகையை செலுத்தும்படி கோரலாம். அவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கலாம்.

சொத்துக்களோ, தொடர்ச்சியான வருமானமே இல்லை என்றால் கல்விக் கடன் பெற முடியுமா?

கல்விக் கடன் என்பது மாணவர்களின் படிப்புத் திறமையைப் பொறுத்து வழங்கப்படுகிறது. அந்தக் கடன் சரியான நேரத்தில் திரும்பச் செலுத்த வேண்டியது உங்களின் கடமையாகும். திறமை உள்ள எவருக்கும் படிப்பதற்கான வாய்ப்பு தரப்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் வங்கிகள் பலவிதங்களிலும் உதவுகின்றன.

கல்லூரியில் பல்வேறு வகையான கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. எந்தெந்த தேவைகளுக்கு கல்விக் கடன் வழங்கப்படும்?

கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், டியூசன் கட்டணம், தேர்வுக் கட்டணம், நூலகம், ஆய்வுக் கட்டணம், புத்தகம், சீருடை போன்றவை வாங்குவதற்கான கட்டணம், வெளி நாட்டுப் படிப்பிற்கான பயணச் செலவு போன்ற செலவினங்களுக்கான தொகையை கல்விக் கடனில் செலுத்த முடியும். மற்றபடி தனியார் கல்லூரிகளில் கேட்கப்படும் நன்கொடை, நுழைவு நன்கொடை (கேப்பிடேஷன் பீஸ்) போன்றவற்றுக்கு கடன் கிடைக்காது. தேர்வுக் கட்டணம் போன்றவை குறித்து முன்கூட்டியே குறிப்பிடுவது நல்லது. படிப்பிற்கு கம்ப்யூட்டர் தேவைப்பட்டால் அதை வாங்குவதற்கு சில வங்கிகள் கடன் தருகின்றன. இருப்பினும் வங்கியைத் தொடர்பு கொண்டு எந்தெந்த செலவினங்களுக்கு கடன் தரப்படுகிறது என்பதை அறிந்து கொள்வது நல்லது.

வங்கிகள் இல்லாத ஊரில் வசிப்பவர்கள் கல்வி கடன் எங்கு பெறுவது?

அருகில் உள்ள ஊர்களில் வங்கிக் கிளைகள் இருந்தால் அந்த வங்கிக் கிளைகளில் கல்விக் கடன் கோரலாம்.

கல்விக் கடன் நிராகரிக்கப்படுவது ஏன் என்று தெரிந்து கொள்ள முடியுமா?

வங்கியில் உங்களுக்கு விண்ணப்பத்தை நிராகரிக்கும் போதே, ஏன் உங்களின் விண்ணப்பம் நிராகரிக்கப்படுகிறது என்ற காரணத்தையும் சொல்வார்கள்.

கல்விச் செலவு முழுவதற்கும் கல்விக் கடன் கிடைக்குமா?

கல்விச் செலவு முழுவதற்கும் வங்கிக் கடன் கிடைக்காது. குறிப்பிட்ட விழுக்காடு தொகையை குறைத்துக் கொண்டுதான் வங்கிகள் கடன் வழங்கும். உள்நாட்டு படிப்புகளுக்கும் வெளிநாட்டு படிப்புகளுக்கும் இந்த பிடித்த தொகை விகிதம் மாறுபடும். எனினும் வங்கியில் இது குறித்த விபரங்களை கேட்டுக் கொள்ளலாம்.

கல்விக் கடனுக்கு பரீசிலனை கட்டணம் செலுத்த வேண்டுமா?

கல்விக் கடன்களுக்கு பரிசீலனைக் கட்டணம் எதையும் பெரும்பாலும் வங்கிகள் வசூலிப்பதில்லை. இருப்பினும் வங்கிக்கு வங்கி இந்த முறை மாறுபடலாம்.

கல்விக் கடனை எத்தன ஆண்டுகளுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும்?

பொதுவாக கல்விக் கடன்களை ஐந்து முதல் ஏழு வருடங்களுக்குள் திரும்பச் செலுத்த வேண்டும். கடன் தொகை அதிகமாக இருப்பின் நீண்ட காலம் எடுத்துக் கொள்ளலாம். இத்தகைய கடன்களுக்கு எட்டு ஆண்டுகள் வரை மட்டுமே வருமான வரிச் சலுகைகள் உள்ளன. கடனை செலுத்த எட்டு ஆண்டுகளுக்கு மேல் ஆனால் வரிச்சலுகைகள் கிடைக்காது. எனவே விரைவில் கடனை செலுத்துவதே சிறந்தது.

குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு மட்டும்தான் கல்விக் கடன் வழங்கப்படுமா?

குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் படிப்பதற்கு மட்டும்தான் கல்விக் கடன் வழங்கப்படும் என எந்த வங்கியும் சொல்வதில்லை. சில கல்வி நிறுவனங்கள் வங்கிகளுடன் இணைந்து கல்விக் கடன் வழங்கு ஏற்பாடுகளை செய்கின்றன. குறிப்பிட்ட கல்வி நிறுவனங்களில் சேருவதற்கு அந்த வங்கிகளிலிருந்து சுலபமாகக் கடன் பெறலாம். இது குறித்து நீங்கள் படிக்க விரும்பும் கல்வி நிறுவனங்கள், கடன் கோரும் வங்கி ஆகியவற்றிடம் விசாரித்து தெரிந்து கொள்ளுங்கள்.

ஒரு குடும்பத்தில் ஒருவருக்குத் தான் கல்விக் கடன் வழங்கப்படுமா?

ஒரு குடும்பத்தில் ஒரு நபருக்கு மட்டுமே கடன் வாங்கப்படும் என்று எந்தவித கட்டுப்பாடும் வங்கிகளிடம் இல்லை. இருப்பினும் உங்களால் கடனை திரும்பச் செலுத்த முடியுமா என்பதை வங்கி அதிகாரிகள் ஆராய்ந்து உறுதி செய்வார்கள். ஏற்கனவே உங்கள் குடும்பத்தில் ஒருவர் கல்விக் கடன் பெற ஈடாக சொத்துப் பத்திரங்களை வங்கிக்கு அளித்திருந்தால், அதன் மதிப்பை கணக்கிட்டு, சொத்துக்களின் மதிப்பு அதிகமாக இருந்தால் அதை ஏற்றுக் கொண்டு கல்விக் கடன் வழங்க வங்கிகள் முன்வரலாம்.

கல்விக் கடனுக்கு காப்பீடு கிடைக்குமா?

சில வங்கிகள் ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி உங்களுடைய கல்விக் கடனைப் பாதுகாக்கும் காப்பீடு ஒன்றினை எடுத்துக் கொள்ளச் சொல்வார்கள். ஒருவேளை வங்கியால் கடனை உங்களிடமிருந்து வசூலிக்க முடியாவிட்டால், காப்பீட்டிலிருந்து கடன் தொகையை எடுத்துக் கொள்வார்கள்.

கல்விக் கடனுக்கு வருமான வரிச்சலுகை கிடைக்குமா?

நம் நாட்டின் வருமான வரிச்சட்டத்தின்படி கல்விச் செலவுகளுக்கு கீழ்க்கண்ட இரண்டு வகையில் வருமான வரிச் சலுகை பெறலாம்.

1. 80சி பிரிவின்படி ஒருவர் தன்னுடைய குழந்தைகளுக்குச் செலுத்தும் பயிற்சிக் கட்டணத்துக்கு (டியூசன் ஃபீஸ்) ரூ. ஒரு லட்சம் வரை வருமான வரிச்சலுகை கிடைக்கும்.
2. ஒருவர் தானோ அல்லது தன் கணவர் / மனைவி / குழந்தைகளோ படிப்பதற்காகக் கல்விக் கடன் வாங்கியிருந்தால், அதற்குச் செலுத்தும் வட்டித் தொகைக்கு 80சி பிரிவின்படி எந்த வரம்புகளும் இல்லாமல் வரிச் சலுகை உண்டு.

மற்றபடி கல்விக் கடன்களுக்கு நேரடி வரிச் சலுகை எதுவும் இல்லை. இருப்பினும் வங்கி அதிகாரிகளிடம் இது குறித்த விபரங்களை தெரிந்து கொள்ளவும்.

கல்விக் கடன் பெறுவதில் வேறு ஏதேனும் பலன் உண்டா?

கல்விக் கடனுக்கு சில வங்கிகள் அரை சதவிகிதம் முதல் ஒரு சதவிகிதம் வரை குறைவாக வட்டி நிர்ணயம் செய்கின்றன. தனிநபர் காப்பீடு, குழு ஆயுள் காப்பீடு போன்ற வசதிகளையும் சில வங்கிகள் வழங்குகின்றன.

கல்விக் கடனை எந்த முறையில் வழங்குவார்கள்?

கல்விக் கட்டணம் நீங்கள் படிக்க சேரும் கல்வி நிறுவனத்திற்கு நேரடியாக வங்கி மூலம் வழங்கப்படும். அதன் பிறகு ஒவ்வொரு வருடமும் மாணவர்கள் படிப்பு செலவைத் தனிப் படிவத்தில் நிரப்பி விண்ணப்பம் அனுப்பினால், அந்தத் தொகையும் நேரடியாக கல்வி நிறுவனத்திற்கு அனுப்பப்படும். வெளிநாட்டு கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் அந்நாட்டு கரன்ஸியில் வழங்கப்படும். அதற்கான பரிமாற்ற செலவைப் பெரும்பாலும் மாணவர்கள்தான் ஏற்க வேண்டும்.

கல்விக் கடன் விண்ணப்பத்தை எவ்வாறு அனுப்புவது?

சில வங்கிகள் கடன் விண்ணப்பத்தை இணையதளம் வாயிலாக மட்டுமே அனுப்பும்படி சொல்கின்றன. சில வங்கிகள் பதிவுத் தபாலிலும் விண்ணப்பங்களை அனுப்பும்படி சொல்கின்றன. பதிவுத் தபாலில் அனுப்பினால் அதற்கான அத்தாட்சியை கைவசம் வைத்திருப்பது நல்லது.

கடன் விண்ணப்பத்தை வங்கிகள் ஏற்க மறுத்தால் என்ன செய்வது?

கல்விக் கடன் கோரி நீங்கள் அனுப்பும் விண்ணப்பத்தை வங்கிகள் ஏற்க மறுத்தால், வங்கி மேலாளரை நேரில் சந்தித்து உரிய காரணத்தை கேட்கலாம்.

திறமை மிகுந்த மாணவர்களின் படிப்பிற்கு எவ்வகையிலும் தடை ஏற்படக் கூடாது என்ற நோக்கத்துடன், வங்கிகள் பல்வேறு உதவிகளையும் செய்து வருகின்றன. அதில் ஒன்றுதான் கல்விக் கடன். இந்தக் கடன் தொகை தகுதி வாய்ந்தவர்களுக்கு கிடைக்க வேண்டும், அவர்கள் படிப்பில் சாதனை படைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்திற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளில் ஒன்றான கல்விக் கடனை பெற முயற்சிக்கும் மாணவர்களுக்கு பொதுவாக எழும் சந்தேகங்களை போக்கும் வகையில் இந்த கட்டுரையில் பல்வேறு விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வங்கி அதிகாரிகளிடமும் தங்களின் சந்தேகங்களைக் கேட்டு தேளிவு பெறலாம்.

கல்விக் கடன் பெற முயற்சிக்கும் மாணவர்கள் தங்களின் விண்ணப்பங்களை உரிய முறையில் பூர்த்தி செய்து வங்கிக்கு தரவும். வங்கி அதிகாரிகளிடம் பணிவாகவும், அவர்களின் கேள்விகளுக்கு உரிய பதில்களை பொறுமையுடனும் சொல்லவும். பெற்ற வங்கிக் கடனை உரிய முறையில் திருப்பிச் செலுத்துவதன் மூலம் பிற மாணவர்களும் பயன் பெற முடியும்.

எனவே மாணவர்களே கல்விக் கடன் பெற்று, சிறந்த முறையில் பயின்று வாழ்வில் வெற்றி பெற்று, சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயன் தரும் செயல்கள் பல புரிந்து சிறந்த குடிமகன் என்ற சிறப்பினை பெற வேண்டும் என்று முற்றம் உங்களை வாழ்த்துகிறது. ■

உலக மருத்துவர்கள் தினம் – ஜூலை 1



மனிதர்களுக்கு ஏற்படும் நோய்களை போக்கும் உன்னத சேவையினை ஆற்றும் மருத்துவர்களைப் பெருமைப்படுத்தும் வண்ணம் வருடந்தோறும் ஜூலை மாதம் 1ஆம் தேதி உலக மருத்துவர் தினம் கடைப்பிடிக்கப்படுகிறதுது. இந்தியாவில் இந்த தினம், வங்காளத்தை சேர்ந்த மருத்துவர் பிதான் சந்திரராய் அவர்களின் நினைவாக தேசிய மருத்துவர் தினமாக அனுசரிக்கப் படுகிறது. பிதான் சந்திரராய், மேற்கு வங்க மாநிலத்தில் 1882ஆம் ஆண்டு ஜூலை மாதம் பிறந்தார். கல்கத்தா மருத்துவக் கல்லூரியில் ஒரே நேரத்தில் மருந்தியல் மற்றும் அறுவை மருத்துவத்திற்கான எம்.ஆர்.சி.பி. மற்றும் எஃப். ஆர்.சி.எஸ். படிப்புகளை இரண்டாண்டுகள் மூன்று மாதங்களிலேயே படித்து முடித்து சாதனை புரிந்தவர்.

சிறந்த மருத்துவராகவும், விடுதலை இயக்க போராளியாகவும் திகழ்ந்த ராய், மேற்கு வங்காளத்தின் இரண்டாவது முதலமைச்சராக, 1948 முதல் 1962ஆம் ஆண்டு வரை 14 ஆண்டுகள் பதவி வகித்தார். வங்காளத்தின் வளர்ச்சிக்கு பல்வேறு திட்டங்களைத் தீட்டி செயல்படுத்தியவர். வங்காளத்தின் முதன்மை நகரங்களாக விளங்கும் துர்காபூர், கல்யாணி மற்றும் புறநகர் பகுதியான பிதான்நகர் ஆகியவை உருவாகக் காரணமாக இருந்தவர். 1962ஆம் ஆண்டு ஜூலை மாதம் முதல் நாள் தன்னுயிர் நீத்த பிதான் சந்திர ராயின் நினைவாக ஆண்டுதோறும் தேசிய மருத்துவர் தினம் கடைபிடிக்கப்படுகிறது. ■

உலக மக்கள் தொகை நாள் – ஜூலை 11

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு அந்நாட்டின் மக்கள் தொகையும் முக்கிய காரணியாகும். அதேசமயம் அதிக மக்கள் தொகை கொண்ட நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியே இருக்கும் என்பதும் உண்மை. மக்கள் தொகை குறித்த விழிப்புணர்வை மக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஜூலை மாதம் 11ஆம் தேதியை உலக மக்கள் தொகை நாளாக அனுசரிக்க உலக நாடுகளுக்கு வேண்டுகோள் விடுத்தது.

மக்கள் தொகைப் பெருக்கத்தினால் உணவு, நீர், சுற்றுச்சூழல் மாசடைதல், சமூகச் சீர்கேடுகள், சுகாதாரப் பிரச்சனைகள், வேலையின்மை, போக்குவரத்து நெரிச்சல், நிலப்பற்றாக்குறை போன்ற பிரச்சினைகள் உருவாகின்றன.

மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்திட பல்வேறு திட்டங்கள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி எளிய மக்கள் மத்தியில் குடும்ப நலத் திட்டமிடல்கள் பற்றிய கருத்தரங்குகள், பாதுகாப்பான கருத்தடை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஊடகங்கள் மூலம் மக்கள் மத்தியில் ஏற்படுத்துதல் போன்றவை சிறப்பான பலனை தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும் பள்ளிகளில் மக்கள் தொகைக் கல்விக்கு முக்கியமளிப்பதுடன், மக்கள் தொகைப் பெருக்கத்தினால் ஏற்படும் சமூகப் பொருளாதார தாக்கங்கள் பற்றிய செயல்பாடுகளை மேற்கொள்வது அவசியமாகிறது. ■

முற்றம் இதழ்

சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை அறிந்திட முற்றம் படியுங்கள்!
முற்றம் மேலும் மேலும் வளர்ந்திட
உங்களின் ஆதரவை தாருங்கள்! முற்றத்திற்கு சந்தா செலுத்திடுங்கள்!!

முற்றம் இதழின் சந்தா விபரம்

ஒரு ஆண்டு சந்தா	ரூ. 180/–
இரண்டு ஆண்டு சந்தா	ரூ. 360/–
மூன்று ஆண்டு சந்தா	ரூ. 540/–

விளம்பரக் கட்டணம்

அட்டையில்	ரூ. 75,000/–
அட்டையின் 2வது பக்கம்	ரூ. 50,000/–
அட்டையின் 3வது பக்கம்	ரூ. 50,000/–
அட்டையின் பின்பக்கம்	ரூ. 50,000/–
புத்தகத்தின் உள்பக்கம்	ரூ. 35,000/–

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை 'முற்றம்' (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

முற்றம் இதழில் வெளியிடப்பட வேண்டிய செய்திகள், வெற்றிக் கதைகள் ஆகியவற்றை பிரதி மாதம் 5ஆம் தேதிக்குள் முற்றம் இதழிற்கு அனுப்பி வைக்கவும். மேலும் புகைப்படங்களை தெளிவாகவும், நல்ல தரத்துடனும் அனுப்பவும். செல்போனில் எடுக்கப்படும் புகைப்படங்கள், வாட்ஸ்அப்பில் அனுப்பப்படும் புகைப்படங்கள் தெளிவாக இல்லாமல் இருப்பதால் அவற்றை அனுப்புவதை தவிர்க்கவும். புகைப்பட கருவியில் படங்களை எடுத்து அனுப்பவும். – ஆசிரியர், முற்றம் மாத இதழ்.

சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது. தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாகக் கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறோம். ■

– ஆசிரியர்,
முற்றம் மாத இதழ்.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்

IFAD
Enabling poor rural people
to overcome poverty

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம்
திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப.,
முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர்

திரு. ஏ. ஆர். கிளாட்ஸ்டன் புஷ்பராஜ்,
கூடுதல் இயக்குநர்
திரு. இரா. இரவிச்சந்திரன்,
தகவல் மற்றும் தொழில் நுட்ப மேலாளர்

சுனாமிக்குப் பின் நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் 15வது திட்ட வழிகாட்டிக் குழு கூட்டம்

தமிழக அரசின் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. ஹன்ஸ்ராஜ் வர்மஇ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 310.05.2018 அன்று சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் 15வது திட்ட வழிகாட்டிக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் முதன்மைச் செயலாளர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. க. பாஸ்கரன், இ.ஆ.ப., அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் செயலாளர் திருமதி. சுகந்தி, இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள், நிதித்துறை, மீன்வளத் துறை ஆகியவற்றின் உயர் அதிகாரிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளராக புதுடெல்லியிலிருந்து பன்னாட்டு வேளாண் வளர்ச்சி நிதியத்தின் திட்ட மேலாளர் (இந்தியா) செல்வி. ரஷா ஓமர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

திட்ட வழிகாட்டிக் குழுக் கூட்டத்தின் பொருள் நிரலை (Agenda) திட்ட முதன்மை செயலர் / திட்ட இயக்குநர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., அவர்கள் விளக்கமளிக்க, 2018–19ஆம் ஆண்டில் இத்திட்டத்தை அனைத்து கடலோர மாவட்டங்களிலும் சிறப்பாக செயல்படுத்துவது குறித்து முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டு, கூட்டம் இனிதே முடிவடைந்தது. ■

உரிமை வழிகாட்டி கைபேசி செயலி மத்திய மற்றும் மாநில அரசின் நலத் திட்டங்களை மக்களிடம் சேர்க்கும் ஒரு புதிய முயற்சி

திருவள்ளூர் மாவட்டம் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டப் பகுதிகளுக்குட்பட்ட 14 ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகளில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊரகப் பகுதி மக்களுக்கு மத்திய மற்றும் மாநில அரசு நலத் திட்டங்களை கூட்டமைப்பின் வாயிலாக தெரியப்படுத்தவும், அவற்றின் மூலம் பயன் பெறவும் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டமானது உரிமை வழிகாட்டி என்ற திட்டத்தினை மக்களிடையே கொண்டு செல்ல முடிவு செய்யப்பட்டது

முதற்கட்டமாக, ஒவ்வொரு கூட்டமைப்பிலிருந்து ஆர்வமுள்ள இரண்டு மகளிரைத் தேர்வு செய்து, கடந்த 09.05.2018 அன்று மொத்தம் 28 மகளிருக்கு கைபேசி செயலி மூலம் அரசு திட்டங்கள் மற்றும் அதன் பயன்களைத் தெரிந்து கொள்வதற்கான வழிமுறைகள் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பகுதி வள மைய அளவிலும், கூட்டமைப்பு அளவிலும் தொடர் பயிற்சிகள் வழங்கியதன் மூலம், முதியோர் ஊக்கத் தொகை, விதவைகள் நலத் திட்டம், மாற்றுத் திறனாளிகள் நலத் திட்டங்கள் மற்றும் பல்வேறு மத்திய மற்றும் மாநில அரசு நலத் திட்டங்கள் மூலம் பயன் பெற இதுவரை 101 விண்ணப்பங்கள் மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன.

பெறப்பட்டுள்ள விண்ணப்பங்களை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு பிரதிநிதிகள் மூலம் தொடர்புடைய அரசு அலுவலகங்களுடன் ஒருங்கிணைத்து, கோரிக்கைகள் பரிசீலிக்கப்பட்டு, பயனாளிகள் உடனுக்குடன் பயனடைந்து வருகின்றனர். பாமர மக்களுக்கு இத்திட்டம் வெகுவாக உதவுவதுடன், உரிமை வழிகாட்டிகளாக செயல் படும் மகளிர் குழு உறுப்பினர்களுக்கு கணிசமான தொகை வருவாயாக கிடைக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ■

கோமாதா கறவை மாடு கூட்டுப் பொறுப்புக் குழு

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள பரமன்கேணி ஊராட்சி அளவிலான குழு கூட்டமைப்பின் உறுப்பினர்களில் கறவை மாடு வளர்ப்பில் ஆர்வமுள்ள சுய உதவிக் குழு உறுப்பினர்களான திருமதி. உமா மகேஸ்வரி, திருமதி. கலையரசி, திருமதி. ராதா, திருமதி. பச்சையம்மாள், திருமதி. உஷா ஆகிய 5 பேர் சேர்ந்து, கூட்டுப் பொறுப்புக் குழுவாக செயல்படவும், கறவை மாடு மூலம் தொழில் நடவடிக்கை மேற்கொள்ளவும், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மற்றும் நாபின்ஸ் நிதி நிறுவனத்தின் மூலம் ரூ. 4,75,000/– கடன் பெற்று கறவை மாடுகள் வாங்கி பால் விற்பனையை துவக்கினர்.

இத்தொழிலுக்காக கோமாதா கூட்டுப் பொறுப்புக் குழுவின் உறுப்பினர்கள் பெற்ற கடன் தொகையில் இதுவரை ரூ. 4,51,250/– செலுத்தியுள்ளார்கள். மேலும் இதுவரை ரூ. 11,76,873/– இலாபம் அடைந்துள்ளோம் என தேரிவித்தனர். பால் விற்பனை மூலம் அவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்து உள்ளதாகவும், வாழ்க்கைத் தரம் மற்றும் பொருளாதாரம் உயர்ந்துள்ளது எனவும் தெரிவித்தனர்.

வருங்காலத்தில் மதிப்புக் கூட்டு பால் பொருட்கள் தயாரித்து, அவற்றை விற்பனை செய்யவும் இவர்களிடம் திட்டம் உள்ளது. தங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் பிற கூட்டுப் பொறுப்புக் குழுக்களையும் இணைத்து, ஒன்று சேர்த்தல் (Aggregation) மூலம் தொழிலை பன்முகப்படுத்தி விரிவுபடுத்தவும் திட்டமிட்டு உள்ளனர். ■

வருமானத்தை பெருக்கும் நடவடிக்கைகளுக்கான திட்டம்

காஞ்சிபுரம் மாவட்டம், நெம்மேலி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் இணைந்துள்ள வெள்ளை ரோஜா மகளிர் சுய உதவிக் குழுவில் கடந்த 7 வருடங்களாக உறுப்பினராக இருக்கும் திருமதி. விஜயா கூறும்போது, 'நான் ஒரு கால் ஊனமுற்ற மாற்றுத் திறனாளி, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வருமானத்தைப் பெருக்கும் தொழிலுக்கான கடன் (IGA) மூலம் 28.03.2017ல் எனக்கு ரூ. 10,000/– கடன் கிடைத்தது. இத்தொகையை ஊராட்சி அளவிலான கூட்டமைப்பினர் எனக்கு வழங்கினர்.

இந்தத்தொகையைக்கொண்டுசலவைத்தொழிலுக்கானகடைஆரம்பித்துஅதில்வரும் வருவாயைக் கொண்டு என் குடும்பத்தின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளேன். இத்தொழிலின் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 150/– முதல் ரூ. 200/– வரை வருமானம் கிடைக்கிறது. நான் வாங்கியக் கடன் தொகையையும் முழுமையாகக் கூட்டமைப் பிற்குத் திரும்பச் செலுத்தியுள்ளேன்.

இந்தக் கடன் கிடைக்காவிட்டால் நான் வெளிநபரிடம் அதிக வட்டிக்கு கடன் வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டு, இன்றைக்கும் கடனாளியாகவே இருந்திருப்பேன். கட்டிய தொகையெல்லாம் வட்டியிலேயே சென்றிருக்கும். கடன் தந்தவரின் பிடியிலேயே என் வாழ்நாளின் பெரும்பகுதி கழிந்திருக்கும். இந்த நிலை ஏற்படாமல் எனக்கு குறைந்த வட்டியில் கடன் கொடுத்து உதவிய சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு என் நன்றிகள்" என்று குறிப்பிட்டார். ■

சமையலறைக் கழிவுகளிலிருந்து எரிவாயு கலன்

விழுப்புரம் மாவட்டம், அனுமந்தை ஊராட்சியில் வசிக்கும் திருமதி. ஆர். சசிகலா, அப்பகுதியில் செயல்படும் ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி கூட்டுப் பொறுப்புக் குழுவில் உறுப்பினராக உள்ளார். அவர் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படும் சமையலறைக் கழிவு மூலம் எரிவாயு கலன் அமைக்கும் திட்டத்தில் இணைந்து, தனது வீட்டில் எரிவாயுக் கலன் அமைத்து பயன்படுத்தி வருகிறார்.

மாதம் ஒன்றுக்கு ஒரு LPG சிலிண்டர் வீதம் பயன்படுத்தி வந்த நிலை மாறி, தற்போது மூன்று மாதத்திற்கு ஒரு முறை மட்டும் LPG சிலிண்டர் தேவைப்படுவதாகத் திருமதி. சசிகலா கூறினார். மேலும் தன் வீட்டிற்கு சமைக்கத் தேவைப்படும் எரிவாயுவை தானே தயார் செய்வது மட்டுமின்றி சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்த்து, இயற்கை முறையில் எரிவாயு தயாரிக்கப்படுகிறது என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

எரிவாயுக் கலனிலிருந்து வெளியாகும் கழிவுகளை தனது வீட்டுத் தோட்டத்திற்கு இயற்கை உரமாகவும் பயன்படுத்தி வருவதாகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார். தற்போது மாதம் ஒன்றிற்கு ரூ. 1000/– வரை எரிபொருள் செலவு மிச்சமாவதாகவும் தெரிவித்தார். ■

சமையலறைக் கழிவு மூலம் அமைக்கப்படும் எரிவாயு கலன் மூலம் சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தவிர்த்து, இயற்கை முறையில் எரிவாயு தயாரிக்கப்படுகிறது.

மாங்கூழ் தொழிற்சாலை கட்டிடப் பணி நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் ஆய்வு

நாகப்பட்டினம் மாவட்டம், சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் திருப்பூண்டி கிழக்கு ஊராட்சி காமேஸ்வரத்தில் மாங்கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் பணி விரைவாக நடந்து வருகிறது.

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம், கோவனட் சென்டர் டெவலப்மெண்ட், திருமறைக்காடு கடலோர விவசாயிகள் கூட்டமைப்பு மற்றும் நாகை இயற்கை விவசாயிகள் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகிய நான்கு அமைப்புகளும் கடந்த 26.04.2017 அன்று புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொண்டதன் பயனாக இந்த மாங்கூழ் தொழிற்சாலை ரூ. 977.62 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இத்தொழிற்சாலை இப்பகுதியில் உள்ள 3000 விவசாயிகளுக்கு பெரும் பயனளிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மாங்கூழ் தொழிற்சாலை அமைப்பதற்கான பணிகள் துவங்கப்பட்டு தற்போது முக்கிய தொழிற்கூடம் மற்றும் ரைபனிங் கூடத்தில் (Ripening Shed) பேஸ்மெண்டிற்கு மேலே செங்கல் கட்டும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அலுவலகக் கட்டிடம் பேஸ்மெண்ட் நிலையில் உள்ளது.

நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அவர்கள்ய 09.05.2018 அன்று இத்தொழிற்சாலை கட்டிடப் பணிகள் முன்னேற்றம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, கட்டிடப் பணிகளை விரைவில் முடிக்க அறிவுறுத்தினார். மாவட்ட ஆட்சியர் அவர்களின் ஆய்வின் போது மாவட்ட செயலாக்க அலுவலர், உதவி செயற்பொறியாளர், உதவி பொறியாளர், CCD தொண்டு நிறுவனத்தினர், TKVK கூட்டமைப்பினர் உடனிருந்தனர்.

இந்த மாங்கூழ் தொழிற்சாலை உற்பத்தியை துவங்கினால் இப்பகுதியில் உள்ள அனைத்து மா உற்பத்தியாளர்களும், தாங்கள் அறுவடை செய்யும் மாம்பழத்தை ம ாம்பழக் கூழ் ஆக மாற்றி அவற்றை பல்வேறு உணவு உற்பத்தி நிறுவனங்களுக்கு நேரடியாக விற்பனை செய்யும் வாய்ப்பு உள்ளதால், இப்பகுதியில் சுமார் 3000 விவசாயிகள் பயன் பெறுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ■

குறுந்தொழில் மேம்பாட்டுத் திட்டம் – ஒரு பயனாளியின் வெற்றிக் கதை

கடலூர் மாவட்டம், மதலப்பட்டு ஊராட்சியை சேர்ந்தவர் திருமதி. மகேஸ்வரி, இவர் செங்கல் சூளையிடும் தொழிலை சிறிய அளவில் குறைந்த முதலீட்டினைக் கொண்டு நடத்தி வந்தார். அதனைத் தொடர்ந்து குறுந்தொழில் மேம்பாடு கடன் மூலம் திருமதி. மகேஸ்வரிக்கு ரூ. 2,50,000/- வட்டியில்லா கடன் பெற்று அவரது தொழிலை விரிவுபடுத்த இந்தக் கடன் உதவியது.

இந்தக் கடன் தொகையை பயன்படுத்தி மேலும் ஒரு ஏக்கர் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, செங்கல் உற்பத்தியை அதிகரித்து, 10 நபர்களை அதிகமாக வேலைக்கு அமர்த்தி, அவர்களுக்கு ஊதியம் வழங்கி வருகிறார். மேலும் தொழில் மூலம் கிடைத்த வருவாயைக் கொண்டு டிராக்டல் ஒன்றை புதிதாக வாங்கி உள்ளார். அது மட்டுமின்றி குறுந்தொழில் கடனையும் முழுமையாகத் திருப்பி செலுத்தியுள்ளார். இந்தத் தொழிலின் மூவம் கிடைத்த வருவாயில் தன் இரு பிள்ளைகளையும் மேற்படிப்பு படிக்க வைத்து வருகிறார்.

கடன் கிடைப்பதற்கு முன்பு ரூ. 1,20,000/- ஆக இருந்த ஆண்டு வருமானம் தற்போது ரூ. 3,50,000/- ஆக உயர்ந்துள்ளது என தெரிவித்தார். சாதாரணமாக இருந்த திருமதி. மகேஸ்வரி இன்று இந்த நிறுவனத்திற்கு முதலாளி என்ற நிலைக்கு உயர்த்தியது இந்தத் திட்டம்தான் என்றும், இந்தத் திட்டம் மூலம் கடன் கிடைக்காமல் இருந்திருந்தால் நான் பழைய நிலையிலேயே இருந்து கஷ்டப்பட்டு இருந்திருப்பேன் என்றும், தற்போதைய வளர்ச்சிக்கு ஆதாரமாக உள்ள சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கு தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். ■

மண்பாண்டம் தயாரிப்பில் கூட்டுப் பொறுப்புக் குழு

கடலோரப் பகுதிகளில் வாழும் பெண்கள் மீன்பிடி தொழிலை மட்டும் நம்பியிராமல் அவரகளுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் வருவாய் தரக்கூடிய பிற தொழில்களில் அவர்களை ஈடுபடச் செய்து, அவற்றை மேற்கொள்வதற்கான கூட்டுப் பொறுப்புக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு, அக்குழுக்களுக்கு சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் வங்கியில் கடன் பெற்றுத் தரப்படுகிறது.

ஒரு சுய உதவிக் குழுவிலிருந்து ஒத்த கருத்துடைய 5 மகளிர் அல்லது வெவ்வேறு குழுக்களிலிருந்து 5 மகளிரை ஒரு கூட்டுப் பொறுப்புக் குழுவாக ஏற்படுத்தி, குழுவில் உள்ள உறுப்பினர்கள் ஒன்றாகவோ அல்லது தனித்தனியாவோ நுண்தொழிலில் ஈடுபட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், தம்பிக்கோட்டை வடகாடு ஊராட்சியைச் சேர்ந்த திருமதி. ரேவதி என்பவரை செயலாளராகக் கொண்டு, பாரதம் கூட்டுப் பொறுப்புக் குழு மண்பாண்டம் தயாரித்து விற்பனை செய்து வருகின்றது.

திருமதி. ரேவதி அவர்கள் நம்மிடம் கூறும்போது, 'நாபின்ஸ் மூலம் ரூ. 1,05,000/–, சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டம் மூலம் ரூ. 37,500/– மற்றும் குழுவின் பங்களிப்பாக ரூ. 7500/– என மொத்தம் ரூ. 1,50,000/– முதலீட்டில் இத்தொழிலை செய்து வருகின்றோம். கடன் உதவி கிடைத்ததால் அதிக அளவில் மண்பாண்டங்கள் உற்பத்தி செய்வதோடு, புதிய புதிய ரக மண் பாண்டங்களை உற்பத்தி செய்து வாடிக்கையாளர்களைக் கவர்ந்து, அதிக அளவில் விற்பனை செய்து நல்ல இலாபம் சம்பாதிக்கின்றோம். அருகிலுள்ள பகுதிகளுக்கு வாகனம் மூலம் மண்பாண்டங்களை எடுத்துச் சென்று விற்பனை செய்து வருகின்றோம். இதனால் எங்கள் வருமானம் இரட்டிப்பாகியள்ளது.

எங்களது மண்பாண்டம் தயாரிப்புக் கூடம் கிழக்கு கடற்கரை சாலையில் அமைந்துள்ளதால் விற்பனைக்கு கூடுதல் வாய்ப்பு கிடைத்துள்ளது. வாங்கிய கடனில் இதுவரை ரூ. 47,112/– செலுத்தியுள்ளோம்.

மண்பாண்டம் தயாரிப்பு தொழில் மூலம் எங்களுக்கு நல்ல வருமானம் கிடைப்பதால் குடும்பத்திலும் சமூகத்திலும் நல்ல மரியாதை கிடைக்கிறது. எங்களின் தொழில் வளர்ச்சிக்கு கடனுதவி பெற்றுத் தந்து, பொருளாதார வளர்ச்சிக்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தந்த சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்திற்கும், அதன் அலுவலர்களுக்கும் மிக்க நன்றி" என்று குறிப்பிட்டார். ■

மாடித் தோட்டம் அமைத்தல் – ஒரு புதிய முயற்சி

சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் கீழ் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் இயற்கை உணவு பழக்க வழக்கங்களை மேற் கொள்ளவும், சுகாதார முறையில் இயற்கை காய்கறிகளை பயிர் செய்து உபயோகிப்பதற்கும் பல்வேறு விழிப்புணர்வு பயிற்சிகள் நடத்தப்பட்டன.

திருமதி. கொன்சா என்பவர் கூறுகையில், "நான் தூத்தூர் ஊராட்சி அளவிலான கூட்டமைப்பிற்கு உட்பட்ட பகுதியில் வசித்து வருகிறேன். எனது மகளிர் சுய உதவிக் குழுவில் சுனாமிக்குப் பிந்தைய நிலைத்த வாழ்வாதாரத் திட்டத்தின் மூலம் மாடித் தோட்டம் அமைப்பது தொடர்பான தகவலை எனது குழு தலைவி தெரிவித்தார்.

அதனடிப்படையில் எனது வீட்டில் மாடித் தோட்டம் அமைப்பதற்காக ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் மனு கொடுத்திருந்தேன். அத்துடன் ரூ. 1171/– பங்களிப்பு தொகையும் செலுத்தினேன். எனக்கு மாடித் தோட்டம் அமைப்பதற்கான பொருட்கள் மற்றும் விதைகள் கூட்டமைப்பு மூலம் கிடைக்கப் பெற்றது. அதற்கான பயிற்சியும் கூட்டமைப்பின் மூலம் தந்தனர். அதன் மூலம் எனது வீட்டில் கத்தரி, வெண்டை, முள்ளங்கி, பீன்ஸ், மிளகாய், அவரை, கீரை போன்றவற்றின் விதைகள், இயற்கை உரங்கள், பூச்சி மருந்துகள் போன்றவை வழங்கப்பட்டு, அதனைக் கொண்டு மாடித் தோட்டம் அமைத்தேன்.

தற்போது மாடித் தோட்டத்திலிருந்து கிடைக்கும் காய்கறிகளை எனது வீட்டு சமையலுக்குப் பயன்படுத்துவது மட்டுமின்றி என் உறவினர்களுக்கு வழங்கி வருகிறேன்" என்று குறிப்பிட்டார். ■

மழைக்காலத்தில் உடல் பராமரிப்பு

மழைக்காலம் ஆரம்பிக்கும் போது எந்நேரமும் மழை பெய்து கொண்டே இருக்கும். இந்தக் காலத்தில் பலரும் சளித் தொல்லையால் அவதிப் படுவார்கள். சாலைகளில் தேங்கியிருக்கும் தண்ணீரில் நடப்பவர்களுக்கு கால்களில் சேற்றுப்புண் வர வாய்ப்புள்ளது. எனவே மழைக் காலத்தில் உடலை எப்படி பராமரிப்பது என்பதைப் பற்றி பார்ப்போம்.

மழை பெய்யும் காலங்களில் இரண்டு நாட்களுக்கு ஒருமுறை தலைக்கு குளிப்பது நல்லது. மிதமான சூட்டில் உள்ள வெந்நீரில் குளித்தால் தோலின் நிறம் மாறாமல் இருக்கும். குளிப்பதற்கு முன்பு உடல் முழுவதும் தேங்காய் எண்ணெயைத் தடவிக் கொள்ளவும். அதேபோல் முழங்காலில் இருந்து கணுக்கால் வரை தேவையற்ற முடிகளை அகற்றும் பசை தடவி மசாஜ் செய்து கொண்டால் மழை நாட்களில் இந்த இடங்களில் பூஞ்சை (பங்கஸ்) தாக்குதல் இருக்காது.

தினமும் இரவு படுக்கப் போகும் முன், ஒரு பாத்திரத்தில் சிறிது வெந்நீரை ஊற்றி, அதில் உங்கள் பாதங்களை 5 நிமிடங்கள் ஊற வைத்து, கைவிரல்களால் மசாஜ் செய்யுங்கள், இப்படிச் செய்தால் உடல் முழுவதும் உள்ள இறுக்கம் விடுபட்டது போல் இருக்கும். வெளியில் சென்று விட்டு வீட்டுக்கு வரும்போது சுத்தமான தண்ணீரால் கால்களை நன்கு கழுவி, சுத்தமான துணியால் ஈரத்தைத் துடையுங்கள்.

குளிக்கும் நீரில் ஒரு கைப்பிடி அளவு வேப்பிலை போட்டு வைத்திருந்து, சிறிது நேரம் கழித்துக் குளிக்கவும். பெண்கள் மழை நாட்களில் தவறாமல் மஞ்சள் தேய்த்துக் குளிக்க வேண்டும். ஏனெனில் கிருமிநாசினியான மஞ்சள் சருமத்தைப் பாதுகாக்கும்.

மழைக்காலத்தில் மருதாணி போட்டுக் கொள்வதை தவிர்ப்பது நல்லது. மருதாணி குளிர்ச்சி என்பதால் சளி பிடிக்கும் வாய்ப்பு உள்ளது. ■

திருமதி. ஜெயந்தி கண்ணன், எம்.ஏ., எம்.எட்.,
முதுகலைப் பட்டதாரி ஆசிரியை,
அரசினர் மேல்நிலைப்பள்ளி, திருவஞ்சேரி,
காஞ்சிபுரம் மாவட்டம்.

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் (TNVRC) – தேசிய வள மையம் (NRO)

நலிவுற்றோர் நிலை ஆய்வு மற்றும் அதன் உத்திகளும், அணுகுமுறைகளும் குறித்த கருத்தரங்கம்

தமிழ்நாடு மாநில அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஆதார மையம் மற்றும் தேசிய வள மையத்தின் சார்பில் "நலிவுற்றோர் நிலை ஆய்வு மற்றும் அதன் உத்திகளும், அணுகுமுறைகளும்" எனும் தலைப்பிலான கருத்தரங்கம், சென்னை, ராஜ் பார்க் ஹோட்டலில் 2018 ஜூன் 6 மற்றும் 7 ஆகிய தேதிகளில் நடைபெற்றது. இதில், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நலிவுற்றோர் நிலை, பயனாளிகளைக் கண்டறிதல், திரட்டுதல், அவர்களுக்கான நல உதவிகள், திட்டங்கள் மற்றும் வாழ்வாதார செயல்பாடுகள் குறித்து, அரசு துறை சார்ந்த அதிகாரிகளும், தன்னார்வ தொண்டு நிறுவன அலுவலர்களும் பகிர்ந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கிற்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, தமிழ்நாடு மாநில மகளிர் ஆணையம், தமிழ்நாடு சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, ஹிணுசிஊணனிம் மற்றும் சமூக நலத்துறைகளை சார்ந்த அரசு அதிகாரிகள் தங்கள் துறை சார்ந்த செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தனர்.

இந்த கருத்தரங்கினை தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் முதன்மை செயல் அலுவலர் திரு. பிரவீன் பி நாயர், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து தலைமையுரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கூடுதல் செயல் இயக்குநர்கள் திரு. பா. செல்வராஜன் அவர்கள், திரு. ஜா. சம்பத் அவர்கள், திரு. சி. கே. வீரணன் அவர்கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர். ■

பச்சிளம் குழந்தைகள், முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் கழிவறை செல்ல பயன்படும் சுழலும் வசதியுடன் கூடிய சக்கர நாற்காலி, கழிவறை உபகரணம் மானிய விலையில் வழங்கப்படுதல்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சார்பாக தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் மாவட்டங்களான திருச்சி, தஞ்சாவூர், ஈரோடு மற்றும் உதகமண்டலத்தில் மக்கள் பங்கேற்புடன் கண்டறியப்பட்ட முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் கழிவறை செல்ல பயன்படும் உபகரணங்களான சுழலும் வசதி மற்றும் சுழலும் வசதியற்ற சக்கர நாற்காலிகள் மற்றும் கழிப்பறை சாதனங்கள் / உபகரணங்கள் 5% மானிய விலையில், 15 தவணைகளுக்குட்பட்டு தேசிய ஊரக வாழ்வாதாரத் திட்டம் செயல்படுத்தப்படும் மேற்கண்ட மாவட்டங்களில் கடனாக வழங்கப்பட்டு வருகிறது.

இதுவரை ஈரோடு மாவட்டம் – 25, திருச்சி மாவட்டம் – 59, உதகமண்டலம் மாவட்டம் – 20, தஞ்சாவூர் மாவட்டம் – 13 என மொத்தம் 117 உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதன் மூலம் திறந்த வெளியில் மலம் கழித்தல் தவிர்க்கப்பட்டு அதன் நிலைத்தத் தன்மையானது உறுதி செய்யப்பட்டுள்ளது.

முதியோர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் பச்சிளம் குழந்தைகள் கழிவறை செல்ல பயன்படும் உபகரணங்களான சுழலும் வசதி மற்றும் சுழலும் வசதியற்ற சக்கர நாற்காலிகள் மற்றும் கழிப்பறை சாதனங்கள் / உபகரணங்கள் வாங்க அளிக்கப்படும் கடன் தொகையானது, எதிர்வரும் காலங்களில் இத்திட்டத்தினை மேம்படுத்திட பேருதவியாக இருக்கும். ■

Published by by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY From Tamilnadu Corporation for Development of Women's Ltd.,
Printed by S. BALASUBRAMANIAN, Works Manager 1, Government Central Press, No. 508, Mint Street, Vallalar Nagar, Chennai – 600 079.
Published from (64,400 Copies circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam,
Valluvakottam High Road, Nungambakkam, Chennai - 600 034. Editor : S. CHINNAPPAN.

தமிழ்நாடு தேசிய அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழக சுய உதவிக் குழுக்களுக்கு பாராட்டு

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியம், அணைக் கரைப்பட்டி ஊராட்சியில் செயல்படும் சாமந்திப்பூ மகளிர் சுய உதவிக் குழு மற்றும் புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை ஊராட்சி ஒன்றியம், வேலூர் ஊராட்சியில் செயல்படும் குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு ஆகியவை தேதிய அளவில் சிறந்த சுய உதவிக் குழுக்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

11.06.2018 அன்று புதுடெல்லியில் நடைபெற்ற விழாவில், தேசிய ஊரக வளர்ச்சித் துறையின் செயலாளர், தேசிய ஊரக வாழ்வாதார இயக்கத்தின் இணை செயலாளர் மற்றும் அலுவலர்கள் முன்னிலையில், மத்திய ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களால், சாமந்திப்பூ மகளிர் சுய உதவிக் குழு மற்றும் குறிஞ்சி மகளிர் சுய உதவிக் குழு ஆகியவற்றிற்கு சிறந்த சுய உதவிக் குழுக்களான விருதுகள் வழங்கப்பட்டன.

13.06.2018 அன்று சென்னை, நுங்கம்பாக்கம், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் நடைபெற்ற, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கக் கூட்டத்தின் போது, தேசிய அளவில் சிறந்த சுய உதவிக் குழுவிற்கான விருதினைப் பெற்றவர்களை, கூடுதல் இயக்குனர்கள் பாராட்டி வாழ்த்தினர். இந்நிகழ்வின் போது, இணை இயக்குநர்கள், மாவட்ட திட்ட அலுவலர்கள் மற்றும் தலைமை அலுவலக அலுவலர்கள் உடனிருந்தனர். ▪

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS 1722 / 2016
Reg. No. TN/CH/(C)/455/2018-2020 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2018-2020
Date of Publication : 2nd Week of the every month

கழிவறை பழக்கம், உடல்வளர்ச்சி, ஆரோக்கியம் மற்றும் அறிவு வளர்ச்சியின் அடையாளம்

உணவு உண்பதற்கு முன்பும், மலம் கழித்த பிறகும், சரியான முறையில் கைகளைக் கழுவுவது எப்படி?

கைகளை நீரினால் ஈரமாக்கிக் கொண்டு சோப்பைத் தடவவும்.

உள்ளங்கைகளை நன்கு தேய்த்துவிட்டுக் கொள்ளவும்.

விரல்களை ஒன்றினுள் ஒன்றாக செலுத்தி நன்கு தேய்க்கவும்.



ஒரு கை விரல் நுனிகளை இன்னொரு உள்ளங்கையில் தேய்க்கவும்.

உங்கள் கைகளை நீரினால் சுத்தமாக கழுவவும்.

சுகாதாரமாய் வாழ்ந்திடுவோம்! உடல் நலத்தை காத்திடுவோம்!